வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.04.2023 வியாழக்கிழமை | இதழ் : 132 | பக்கங்கள் : 16


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# சீன தொலைக்காட்சி சேவை இலங்கையிலும் ஆரம்பம்!

கொழும்பு, ஏப்ரல் 20

**இலங்கையில் சீன தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றும் இலவச ஒளிபரப்பை ஆரம்பித்துள்ளது. ‘சைனிஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேர்க்’ என்ற அலைவரிசையை பரீட்சார்த்தமாக சேவையை ஆரம்பித்துள்ளது.**




அரச தொலைக்காட்சி சேவைகளான ரூபவாகினி, ஐ, நேத்ரா ஆகிய ஒரே குழும தொலைக் காட்சி அலைவரிசைகள் யூ.எச்.எவ் இல் ஒளிபரப்பாகின்றன. இதேபோன்றே சீன தொலைக்காட்சியும் ஒளிபரப்பாகவுள்ளது.

கடந்த பெப்ரவரியில், இந்த ஒளிபரப்பு சேவை பங்காளிகளை கோரியது. இதன்போது சீன ஒளிபரப்பு சேவை அதனை தம் வசப்படுத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்துக்கு 5 இடங்களில் அலைவரிசை கோபுரங்கள் உள்ளன. அவை, கொழும்பு, மடேல்சிம் (ஊவா) கொக்காவில், முல்லைத்தீவு.

யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 15



## எதிர்க்கட்சிகளின் யாத்திரை நல்லூரிலிருந்து நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 20

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கும் ‘பாசத்துக்கான யாத்திரை’ நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலிலிருந்து ஆரம்பமானது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பின்பேரில் நடைபெறும் இந்த யாத்திரை நாடு முழுவதும் இருந்து ஐந்து இடங்களில் நேற்று ஆரம்பமானது. இதில், வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார் என இரு இடங்களில் இருந்து யாத்திரைகள் ஆரம்பமாகின.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் 15

## பூநகரி, மாங்குளம், பரந்தனில் புத்தர் சிலை வைக்க முயற்சி!

### சிறீதரன் எம். பி. சாடல்

கிளிநொச்சி, ஏப். 20

பூநகரி, மாங்குளம், பரந்தன், உருத்திரபுரம் பகுதிகளில் அரச மரங்கள் நடப்பட்டு சமநேரத்தில் புத்தர் சிலைகளை வைக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தின் போதே அவர் மேற் 15



## கிளிநொச்சியில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

கிளிநொச்சி, ஏப். 20

தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட இன வழிப்பை நிறுத்த வலியுறுத்தி ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதியின் நினைவுநாளில் நேற்று கிளிநொச்சியில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதர 15

## போதையில் மகன் தாக்கியதில் தந்தை பலி; தாயார் படுகாயம்!

கிளிநொச்சி, ஏப்.

மதுபோதையில் மகன் தாக்கியதில் தந்தை உயிரிழந்தார். தாயார் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவில் மயில்வாகனபுரம் - கொழுந்துப்புலவு என்ற இடத்தில் நேற்று புதன்கிழமை நடு இராத்திரி ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த பிச்சைமுத்து இராமசாமி (வயது - 64) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்தவரின் 22 வயதான (வளர்ப்பு) மகன் தினமும் மது போதையில் வந்து அவரையும், அவரின் மனைவியையும் அடித்துத் துன்பு 15



## கொழும்பு சென்ற பஸ் விபத்து! சாரதி உயிரிழப்பு 10 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 20

கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு ஊடாக கொழும்பு சென்ற இ. போ. ச. பேருந்தும் டிப்பரும் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். 10 பேர் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். 15

## 100,000 குரங்குகளை நாம் எவரிடமும் கேட்கவில்லை!

### சீன தூதரகம் இப்படி விளக்கம்

கொழும்பு, ஏப். 20

ஒரு இலட்சம் குரங்குகளை இலங்கையின் எந்த தரப்பினரிடமும் நாம் கேட்கவில்லை என்று இலங்கைக்கான சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இது குறித்துத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்திலேயே தெரிவித்துள்ளது.

அதில், சீனாவில் உள்ள வன விலங்குகள், தாவரங்களின் இறக்குமதி - ஏற்றுமதியை மேற்பார்வை செய்யும் பிரதான அரசாங்கத் திணைக்களமான 15



## அன்னை பூபதி நினைவேந்தல் தாயகம் முழுவதும் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஏப். 20

அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதான நிகழ்வு அவர் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த மட்டக்களப்பு மாமாங்கத்தில் நடைபெற்றது.

காலை முதல் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. தொடர்ந்து மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்று அன்னதானமும் நடைபெற்றது.

அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய வாகனப் 15

## கல்வித் துறையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த நேரும்!

### ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 20

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப் பணியை ஆரம்பிப்பது தொடர்பில் இந்த வார இறுதிக்குள் தீர்க்கமான பதிலை உரிய அதிகாரிகள் வழங்க வேண்டும். அவ்வாறில்லை எனில், அடுத்த வாரம் கல்வித்துறையை அவசர நிலைமையின் கீழ் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

கல்வி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்று 15

## கைதடி விபத்தில் பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், ஏப். 20

மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸ் அதிகாரி பேருந்துடன் மோதுண்டு வீதியில் வீழ்ந்த நிலையில் பின்னால் வந்த வாகனம் மோதி 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கடந்த திங்களன்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அண்மைய நாட்களாக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பெரும் எண்ணிக்கையான எம். பிக்கள் அரசுடன் இணையவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதுமட்டுமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியையும் அதன் தாய்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைக்கும் முயற்சியில் மனோ கணேசனும் ரவூப் ஹக்கீமும் முயற்சி செய்தனர் எனவும் மனோ கணேசனே தெரிவித்தும் இருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக் கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களான அவர்கள் இருவரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு அழைத்திருந்தார். அந்த வேளையிலேயே இரண்டு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியை அவர்கள் ஆரம்பித்திருந்தனர் என்று அறியவருகின்றது.

ஆனாலும், அவர்களின் யோசனையை சஜித் பிரேமதாஸ நிராகரித்து விட்டாரென மனோ கணேசன் பின்னர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே சஜித் பிரேமதாஸ நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டு, தமது கட்சியிலிருந்து பலர் அரசுடன் இணைய விருக்கின்றனரென்றும் தமது கட்சி அரசுடன் இணையவிருப்பதாகவும் வெளிவரும் செய்திகளை மிக காட்டமாக மறுத்துள்ளதுடன் அரசாங்கத்தை ஒரு கும்பல் என்றும் அந்தக் கும்பலுடன் தான் இணையப் போவதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

அதிலும் குறிப்பாக அவர் தெரிவித்திருப்பது, 'அந்த கும்பலுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே உள்ள முக்கியமான பிளவுக்கோடு என்னவென்றால், அவர்கள் பேரங்கள் மற்றும் சிதைவுகளின் அரசியலை நம்புகிறார்கள். அதே நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் உண்மையை நம்புகிறோம்.' என்று.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சிதைவுகளின் அரசியலை ஆரம்பித்தது யார் என்பதை ஏனோ அவர் இலகுவாக மறந்துவிடுவதைக் காண முடிகின்றது.

சஜித்தின் அந்த காட்டமான நீண்ட அறிக்கையை படித்ததும் பலரும் எதிர்பார்ப்பதுபோல அவர் பக்கத்திலிருந்து பலரும் அரசுடன் இணைவது நடக்கப் போவதில்லை என்று தெரிந்தது.

அதனால், அங்கு நடக்கும் செய்திகளை அறிந்துகொள்வதற்காக தெற்கிலுள்ள மூத்த ஊடகர் ஒருவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் சொன்ன தகவல் தலைகீழாக இருந்தது.

தனது அணியிலிருந்து பலரும் வெளியேறுவது உறுதியாகிவிட்ட பின்னர், அவ்வாறு செல்ல இருப்பவர்கள் ஒவ்வொருவராக சந்தித்து கடைசிக்கட்ட முயற்சியில் ஈடுபட்டிருந்த சஜித் கடைசியாக இப்படியோர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

ஆனால், ரணிலின் தரப்புக்கு செல்வார்கள் என்று பரவலாக நம்பப்படும் ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரட்ண, கபீர் காசிம், தலதா அத்துக்கோரள போன்ற தலைவர்கள் சஜித்தை சந்திக்கவே விரும்பவில்லை என்றும் அவர்கள் இதுவரை தாங்கள் அவ்வாறு வெளியேறப் போவதில்லை என்பதை பகிரங்கமாகக் கூறாமல் இருப்பதிலிருந்து அங்கே ஏதோ நடக்கின்றது என்பது புரியவில்லையா? என்று கேட்டார் அந்த ஊடக நண்பர்.

எதிர்வரும் இருபத்தி ஐந்தாம் திகதி பாராளுமன்றம் கூடும்போது தேசிய அரசாங்கம் ஒன்றுக்கு ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுக்கவிருப்பதாக தம்மிடம் தெரிவித்தாரென மனோ கணேசன் தெரிவித்திருப்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

அவ்வாறு அவர் அழைப்பு விடுத்த பின்னரே கட்சி மாற்றம் நடக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இன்று வரை ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களின் ஆதரவுடன்தான் ஆட்சியில் இருக்கின்றார். ஆனால், தற்போது அவரின் அமைச்சரவையில் இருக்கும் பொதுஜன பெரமுன எம்.பிக்கள் தங்களை பொதுஜன பெரமுனவுடன் பொருத்திப் பார்ப்பதை அண்மைக்காலமாக தவிர்த்தே வருகின்றனர். அவர்களில் பலரும் பெரும்பாலும் அடுத்த தேர்தலில் ரணில் அணியுடன் சங்கமமாகி விடுவார்கள் என்பது தெரிந்ததுதான்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்து வந்து ரணிலுடன் இணைபவர்களையும் சேர்த்தால் ரணில் தரப்பில் பல பத்து எம்.பிக்கள் வந்துவிடுவார்கள்.

அதைவிட, ரணிலுடன் ஐக்கியமாக சிறுபான்மைக் கட்சிகளும் தயாராக இருக்கின்றன. அதைவிட மற்று மோர் அணியும் தயாராகிக் கொண்டிருக்கின்றது. அது பற்றி பின்னர் பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# ஏற்பாட்டுக் குழுவின் நேரத்துக்கு முன்னர் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்த தடை

### வெளி இடத்தில் நினைவேந்திய முன்னணி

மட்டக்களப்பு, ஏப். 20



மட்டக்களப்பு அன்னை பூபதி நினைவிடத்தில் ஏற்கனவே திட்டமிட்ட நேரத்துக்கு முன்னர் நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தியாகத் தாய் அன்னை பூபதியின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வடக்கு-கிழக்கு எங்கும் பெரும் எழுச்சியுடன் நடைபெற்றன.

இவ்வாறான நிலையில், அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி ஊர்திப் பவனி முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஊர்தி நேற்று மட்டக்களப்பைச் சென்றடைந்தது. இவ்வாறான நிலையில், மட்டக்களப்பு அன்னை பூபதி நினைவுத்திடலில் குறித்த நேரத்துக்கு முன்னர் நினைவேந்தல் நடத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அன்னை பூபதி நினைவிடத்தில் பல்வேறு நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்பாட்டுக் குழுவினர் திட்டமிட்டு அதற்குரிய நேரத்தையும் திட்டமிட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்பாட்டுக் குழுவினரின் நேரத்துக்கு முன்னதாக நினைவிடத்தில் நினைவேந்தலை மேற்கொள்ள முயற்சித்தனர்.

நினைவிடத்தில் இப்போது நினைவேந்தல் மேற்கொள்ள முடியாது எனவும் அதற்காக தாம் நேரத்தைத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த நேத்திலேயே அனைவரும் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் ஏற்பாட்டுக் குழுவினர் முன்னணியினரிடம் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு தாம் குறித்த நேரத்துக்கு முன்னதாக நினைவேந்தல் மேற்கொள்ள நினைத்தால் நினைவிடத்துக்கு வெளியில் மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வடக்கிலிருந்து சென்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், அன்னை பூபதியின் நினைவிடத்திடத்துக்கு வெளியில் அஞ்சலி செலுத்திவிட்டு, திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# 'கோட்டா கோ கம' போராட்டத்தின் முக்கிய செயல்பாட்டாளர் உயிரிழப்பு

### சனத் நிஷாந்தவின் சர்சைக்குரிய பதிவு

கொழும்பு, ஏப். 20



அரசுக்கு எதிரான காலி முகத்திடல் 'கோட்டா கோ கம' வெகுஜன போராட்டத்தை ஆரம்பித்ததில் முக்கிய பங்காற்றியவரான புத்தி பிரபோத கருணாரத்ன தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

அவருக்கு சமூக ஊடகங்களில் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அவரது உயிர்மாய்ப்புக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இந்த நிலையில், பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த சர்ச்சைக்குரிய பதிவொன்றை இட்டுள்ளார்.

சனத் நிஷாந்தவின் பதிவில், கோட்டா கோ கிராமத்தில் முதல் சிறிய குடிசையைக் கட்டியவர் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான புத்தி பிரபோத.

புத்தி பிரபோத கருணாரத்னவும் மே 9 தாக்குதலின் போது நாட்டைப் பற்ற வைப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

புத்தி பிரபோத கடந்த காலமாக மகிந்தவின் உடல் நிலைக்காக பிரார்த்தனை செய்தவர். மகிந்த இறக்கும் வரை காத்திருந்தார்.

எனினும், அவர் நீண்ட காலமாக மன உளைச்சலில் இருந்து வந்தார்.

அவர் மன உளைச்சலுக்கு சிகிச்சை பெற்று வந்தது தற்போது தெரியவந்துள்ளது. அப்படிப் பார்க்கும்போது, காலிமுகத்திடல் போராட்டம் மனநோயால் பாதிக்கப்பட்ட பலரால் வழிநடத்தப்பட்டது. ஆனால், போராட்டம் தொடங்கி ஓராண்டு முடிவதற்குள் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

முதல் போராளியான புத்தி பிரபோத கருணாரத்னவுக்கு நிம்மதி! " என குறிப்பிட்டுள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது குண்டர் கும்பலை ஏவி தாக்கிய விவகாரத்தில் சனத் நிஷாந்த கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உண்மை நல்லிணக்க ஆணைக்குழு நிறுவும் பொறிமுறை வெற்றி தரும்!

### பிரதமர் தினேஷ் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 20

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் அரசின் உள்ளகப் பொறிமுறை வெற்றியளிக்கும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் அரசின் உள்ளகப் பொறிமுறையை எதிர்ப்பவர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும்.

அதற்கான காரணத்தையும் அவர்கள் விலாவாரியாக முன்வைக்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேறும்போது அதன் ஊடாகத்தான் அரசு அந்தப் பணிகளை முன்னெடுக்கும். இந்த அரசின் நடவடிக்கை நிச்சயம் வெற்றியளிக்கும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
20.04.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்கள் திருந்தாத வரையில் ?

இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் உணவு தவிர்த்து உயிரிழந்த பூபதியின் நினைவு நிகழ்வின்போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இந்தியாவுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கின்றார். இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தும் முயற்சியில் பிரதான தமிழ் கட்சிகள் பலவும் முயற்சிகளை மேற்கொண்டுவரும் சூழலில், அதனை சீர்குலைக்கும் நோக்கில் இந்திய எதிர்ப்பு பிரசாரத்தை - காங்கிரஸ் மேற்கொண்டிருக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் ஆழமான புரிதலற்று - விடயங்களை தவறாக முன்வைத்திருக்கின்றார். உதாரணமாக, இந்தியா தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களை வழங்கி தமிழீழம் பெற்றும் தருவதாகக்கூறி ஏமற்றியதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்திருக்கின்றார். இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் இடம்பெற்ற எந்தவொரு விடயத்தையும் அவர் அறிந்திருக்கவில்லையென்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இந்தியா தமிழ் இளைஞர்களுக்கு அயுதப் பயிற்சியளித்தபோது இந்தியா தனிநாட்டை ஆதரிக்குமென்று அன்றிருந்த இளைஞர் இயக்கங்களின் தலைவர்கள் எண்ணிக்கொண்டனர். ஏனெனில், அன்று பலரிடம் இருந்த நம்பிக்கை இந்தியா, பாகிஸ்தானை பிரித்து பங்களாதேஷை உருவாக்கியது போன்று ஈழத் தமிழர்களுக்கும் ஒரு தனிநாட்டை பெற்றுத்தருமென்று இயக்கங்கள் மட்டுமல்ல, அன்றிருந்த பிரதான மிதவாத தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணியும் அவ்வாறுதான் கருதியது. ஆனால், இந்தியாவிடம் அவ்வாறானதொரு திட்டம் ஒருபோதுமே இருந்திருக்கவில்லை. ஏனெனில், பாகிஸ்தானும் இலங்கையும் ஒன்றல்ல. இதனை காலம் கடந்தே தமிழ் தலைமைகள் புரிந்துகொண்டன.

தமிழ் ஆயுத இயக்கங்கள் இலங்கை அரசுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த காலத்தில், இலங்கை விவகாரங்களுக்கான விசேட பிரதிநிதியாக இருந்த பார்த்தராசதி அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். அதாவது, இந்தியா தனிநாட்டை ஆதரிக்கவும் மாட்டாது - அனுமதிக்கவும் மாட்டாது. இந்த பின்புலத்தில்தான் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் ஆயுத விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பின. அனைத்து தமிழ் அமைப்புகளும் ஏற்றுக்கொண்ட பின்னர்தான் இந்தியா விடயங்களை முன்னெடுத்திருந்தது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர். பின்னர் அந்த நிலைப்பாட்டிலிருந்து விலகினர்.

இது வரலாறு. ஆனால், இந்த வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளாமல், தொடர்ந்தும் இந்திய எதிர்ப்பு பிரசாரங்களை முன்னெடுப்பதன் உள்நோக்கம் என்ன? இதனால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிட்டும்? இந்திய எதிர்ப்பை கையிலெடுப்பதன் ஊடாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ன கூற வருகின்றது? இந்தக் கேள்விகள் எவற்றுக்கும் தெளிவான பதிலில்லை.

தமிழ் மக்களுக்கு நன்மையில்லாத இந்த பிரசாரத்தை எதற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) முன்னெடுக்கின்றது? யாரை திருப்திப்படுத்துவதற்காக இந்திய எதிர்ப்பு பிரசாரங்களை முன்னெடுக்கின்றது? ஒருவரை நினைவுகூர வேண்டுமாயின் அமைதியாக விடயத்தை முன்னெடுக்கலாம். அதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால், முன்னணியினர் இந்திய எதிர்ப்பு பிரசாரங்களை முன்னெடுப்பதற்காகவே இவ்வாறான நினைவுகூரல்களை மேற்கொள்கின்றனர்.

ஒரு பிராந்திய சக்தியை எதிர்த்து தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிட்டப் போவதில்லை. வேண்டுமானால், இவ்வாறான இந்திய எதிர்ப்பு பிரசாரங்களை, இந்தியாவுக்கு எதிரான அந்நிய சக்திகள் பயன்படுத்தக்கூடும். தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையுமில்லாத விடயங்கள் எதற்காக முன்னெடுக்கப்படுகின்றன? - இது தொடர்பில் தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பற்று நடப்பதற்கு மக்களும் ஒரு காரணமாகும். தங்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பொறுப்புடன் நடந்துகொள்கின்றனர் என்பதைத் தொடர்ந்தும் அவதானிக்க வேண்டும். பொறுப்பற்றவர்களை மக்கள் தெரிவு செய்யும்போது அவர்களின் செயல்பாடுகளும் மக்களுக்கு எதிராகவே இருக்கும். எனவே, மக்களின் சிந்தனை மாறாத வரையில், தமிழர் தாயகத்தில் அரசியல் மாற்றம் கானல் நீரே!

# முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டுமானால் அதிகார கட்டமைப்பு எளிதாக வேண்டும்!

## எரிக் சொல்ஹெய்ம் அரசுக்கு ஆலோசனை

*கொழும்பு, ஏப். 20*

சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும்வகையில் இலங்கையின் அதிகாரத்துவ அமைப்பு எளிமையானதாகவும் - எளிதானதாகவும் இருக்கவேண்டும் என சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் துரிதமாக முதலீட்டாளர்களை கவர விரும்பினால் அதிகாரத்துவம் என்பது எளிமையானதாகவும் இலகுவானதாகவும் காணப்படவேண்டும் என தெரிவித்துள்ள அவர் முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளை வெளிநாட்டு நாணயங்களிலேயே மேற்கொள்வதற்கு அனுமதிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச முதலீட்டாளர்களின் கவனத்தை இலங்கை நோக்கி திருப்புவது என்றால் இரண்டு விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். முதலாவது அதிகாரத்துவ முறைமை இதனை இலகுவானதாகவும் எளிமையானதாகவும் மாற்ற வேண்டும்.

இலங்கைக்கு முதலீடு செய்வதற்காக முதலீட்டாளர்கள் வரும்போது அவர்கள் 15 அமைச்சுகளுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படக்கூடாது அவர்கள் ஒரு இடத்திலேயே முதலீடு தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் பூர்த்தி செய்யும் நிலைமை காணப்படவேண்டும். இலங்கை இந்தியா சீனாவுடன் நெருக்கமாக இணைந்து செயல்படவேண் டும். உலகின் 80 வீதமான சோலர் பனல்கள் மின்சார பற்றரிகள் சீனாவில் தயாரிக் கப்படுகின்றன. உலகின் 74 வீதமான மின்சார கார்கள் சீனாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.

இந்திய நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்வரவேண்டும் என தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம் அதானி நிறுவனம் மன்னாரில் காற்றாலை மின் திட்டத்தை ஆரம்பிக்கும் யோசனையை முன்வைத்துள்ளது. மேலும் திருகோணமலையில் சூரிய மின்சக்தி திட்டம் ஒன்றுக்கான யோசனையும் காணப்படுகின்றது.

இலங்கை இதனை பயன்படுத்தி இந்தியா சீனாவின் முதலீடுகளை பெறவேண்டும். சீனாவின் கடன்மறுசீரமைப்பிற்கான உறுதிமொழி போன்றவை காரணமாக இலங்கை எதிர்காலம் குறித்து சிந்திக்கலாம் என நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (ஐ)

# மின்சார சபை ஒக்ரோபருக்கு முன்னர் மறுசீரமைக்கப்படும்!

## மின்சக்தி இராஜாங்க அமைச்சர்

*கொழும்பு, ஏப். 20*

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான நிபுணர் குழு அறிக்கை வரும் மே மாதம் முதல் வாரத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் மறுசீரமைப்பு பணிகளை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என மின்சார துறை மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் பட்டியலில் மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிறீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையை அடிப்படையாக கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கையை எதிர்வரும் மே முதல் வாரத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மறுசீரமைப்பின் போது மனித வள முகாமைத்துவத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதால் எவரது தொழிலுரிமைக்கும் பாதிப்பு ஏற்படாது. அரசாங்கத்துக்கு சுமையாக உள்ள நிறுவனங்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்காவிட்டால் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது வெறும் அரசியல் பிரசாரமாகும். ஒரு சில அரச நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தியுள்ளதால் பொது மக்களுக்கான சேவைகள் வினைத்திறனாக கிடைக்கப்பெறுகிறது - என்றார். (ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

*கொழும்பு, ஏப்ரல் 20*


குருநாகல் மீகலவெள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெதினிகம பிரதேசத்தில், உள்நாட்டில் உற் பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி யுடன் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

வேதினிகம, மீகலேவ பிரதே சத்தைச் சேர்ந்த 48 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 20 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 07
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை




**மேடம்**
உணர்ச்சி வேகத்தில் துரித முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மிதுனம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். கடமை உணர்வுடன் செயல்படும் நாள்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். அலுவலகத்தில் நிம்மதி உண்டு.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் பெரிய பதவிகள் தேடி வரும். நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் திறமைகளை கண்டு அறிவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக பணக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல்கள் நீங்கி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். எதிர்பார்த்திருந்த பணம் வரும். சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் சீண்டிப் பார்ப்பார்கள் உணர்ச்சி வசப்படாதீர்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். வேலையாட்களிடம் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது நல்லது.

# கர்நாடக சட்டப் பேரவையில் அ. தி. மு. க. தனித்து போட்டி!

சென்னை, ஏப். 20

கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தல் அ. தி. மு. க. தனித்துப் போட்டியிடவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அத்துடன், கூட்டணி கட்சியான பா. ஜ. க. வேட்பாளரை அறிவித்த தொகுதியில் அ. தி. மு. க.வின் வேட்பாளரையும் அறிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தல் வருகின்ற மே 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில், பா. ஜ. க கூட்டணயில் அ. தி. மு. க. போட்டியிடுவது குறித்து பேச்சு நடைபெற்று வந்தது. அதேபோல், பன்னீர் செல்வம் தரப்பினரும் கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பாவை சந்தித்து போட்டியிடுவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், புலிகேசி நகர் தனித் தொகுதியில் பா. ஜ. க. வேட்பாளராக முரளி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அ. தி. மு. க. சார்பில் அன்பரசன் போட்டியிடவுள்ளார் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

சமீபகாலமாக பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இதனிடையே கர்நாடக தேர்தல் இணைப் பொறுப்பாளராக அண்ணாமலை செயல்பட்டு வரும் நிலையில், அ. தி. மு. க. தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளமை கூட்டணியில் மேலும் விரிசல் ஏற்படும் சூழலை உருவாக்கியுள்ளது. (ஐ)

# கிறிஸ்தவ ஆதி திராவிடர்களுக்கும் இடஒதுக்கீடு வழங்குமாறு தீர்மானம்!

## சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றம்!

சென்னை, ஏப். 20

கிறிஸ்தவர்களாக மாறிய ஆதி திராவிடர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தி சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனிப் பிரேரணை ஒருமனதாக நிறைவேறியது.

நேற்றைய தினம் தனிப் பிரேரணையை முன்வைத்து பேசிய முதலமைச்சர்,

இந்து மதத்தில் இருந்து வேறு மதம் மாறியவர்கள் பட்டியலின சாதிகளில் இணைய முடியாது. ஆனால், சீக்கியம் மற்றும் பௌத்த மதங்களுக்கு மாறியவர்களை பட்டியலின சாதிப்பட்டியலில் சேர்த்து முறையே 1956, 1990 ஆண்டுகளில் சட்ட திருத்தம் செய்யப்பட்டது. இதே போன்ற திருத்தத்தையே கிறிஸ்தவர்களாக மாறிய ஆதிதிராவிடர்களும் எதிர்பார்க்கின்றனர்.

வரலாற்று ரீதியாகவே ஆதி திராவிடர் வகுப்பினராக இருக்கும்போது அவர்களுக்கு பட்டியலின வகுப்புக்கான உரிமையை வழங்குவதே சரியானது. மனிதர்கள் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. ஆனால், சாதி என்பது மாறுதலுக்கு உட்பட்டது அல்ல. சாதி ஏற்றத் தாழ்வை வைத்து எந்த வகையில் அடக்கி ஒடுக்கினார்களோ, அதே சாதியை வைத்தே இடஒதுக்கீடு வழங்கி உயர்வடைய வைக்கும் தத்துவம்தான் சமூகநீதித் தத்துவம்.

ஆதிதிராவிடர்களாக இருந்து மதம் மாறிய பின்னரும் தீண்டாமை கொடுமை தொடர்கிறது. சமூகநீதி தத்துவத்தை அனைத்து வகையிலும் பின்பற்ற வேண்டும் என்பதே திராவிட மொடல் அரசின் நோக்கம். கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் சமூகநீதி உரிமைகள் தரப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# பாராளுமன்றத் தேர்தலில் பா. ஜ. கவுக்கு அதிக வெற்றி!

## அமைச்சர் முருகன் தெரிவிப்பு



சென்னை, ஏப். 20

2024 பாராளுமன்ற தேர்தலில் அதிக அளவிலான தொகுதிகளில் பா. ஜ. க. வெற்றி பெற வேண்டும். அதுவே நம் இலக்கு - என்று கூறியுள்ளார் மத்திய மீன்வளங்கள் அமைச்சர் எல். முருகன்.

நாமக்கல்லில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பா. ஜ. க. இன்று மிகப்பெரிய அளவில் எழுச்சி பெற்று வீறு நடை போட்டுக் கொண்டுள்ளது. தமிழகத்தில் முக்கியமான கட்சியாக வளர்ந்துள்ளோம். பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்துக்குப் பல திட்டங்களை வழங்கியுள்ளார்.

மக்களின் தேவை அறிந்து கோரிக்கைகளை நிறைவேற்றி தரும் அரசாக நரேந்திர மோடியின் அரசு உள்ளது. பா. ஜ. க. நிர்வாகிகள் பயனாளிகளை நேரடியாக தொடர்பு கொண்டு, அவர்களோடு நட்பு பாராட்டி, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்க வேண்டும்.

பிரதமர் தமிழ் புத்தாண்டை நம்மோடு இணைந்து கொண்டாடியது நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாகும். தமிழ் பண்பாடு, கலாசாரத்துக்காக பிரதமர் மேம்படுத்தி வருகிறார். வருகின்ற 2024 பாராளுமன்ற தேர்தலில் அதிக அளவிலான தொகுதிகளில் பா. ஜ. க. வெற்றி பெற வேண்டும். அதுவே நம் இலக்கு. அதற்கு நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழக காங்கிரஸ் முக்கியஸ்தரின் 11 கோடி ரூபாய் சொத்துகள் முடக்கம்!

சென்னை, ஏப். 20

காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிதி அமைச்சராக இருந்த ப. சிதம்பரத்தின் மகனின் 11 கோடி இந்திய ரூபாய் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

அந்நிய முதலீடு தொடர்பான வழக்கு ஒன்றில் சட்டவிரோதமாக பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே அவரின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, கார்த்தி சிதம்பரம் இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் அவருக்கு சொந்தமான 11 கோடியே 4 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்பிலான சொத்துகளை அரசு முடக்கியுள்ளது. (ஐ)

# குரங்குகளுக்கு பதில் நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை ஏற்றுமதி செய்யுங்கள்!

## சுற்றாடல்துறை நிபுணர் கருத்து

கொழும்பு, ஏப். 20

**குரங்குகளுக்கு பதிலாக நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை விஞ்ஞான ஆய்வுகளுக்காக ஏற்றுமதி செய்யவேண்டும். அரசியல்வாதிகளின் மூளையை உணவுக்கு பயன்படுத்த முடியாது. ஏனெனில், அவர்களுக்கு மூளை கிடையாது என சுற்றாடல் துறை நிபுணர் நயனக ரன்வெல்ல அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- விவசாயப் பயிர்களுக்கு குரங்குகளால் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆகவே அதைக் கட்டுப்படுத்த ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சீனாவில் உள்ள மிருககாட்சிச் சாலைக்கு குரங்குகளை வழங்குவதாக குறிப்பிடப்படுகின்றது.

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்குவதால் விவசாயப் பயிர்களுக்கு காட்டு விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கு நிரந்தர தீர்வு காண முடியாது.

வன விலங்குகளின் வாழ்விடச் சூழல் அழிக்கப்படும்போது விலங்குகள் மனித நடவடிக்கைக்கு எதிராக செயற்படும். வன விலங்குகளின் வாழ்விடத்தைப் பாதுகாக்க அரசாங்கம் கொள்கை அடிப்படையில் உறுதியான திட்டங்களை வகுக்க வேண்டும்.

ஒரு இலட்சம் குரங்குகள் சீனாவில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்கு தான் உண்மையில் வழங்கப்படுகிறதா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

சீனாவில் குரங்கு மூளையை கொண்டு சமைக்கும் உணவு பிரபல்யமானது. உணவு உற்பத்திகளுக்காக குரங்குகள் கோரப்படலாம்.

விஞ்ஞான ஆய்வு நடவடிக்கைகளின் இறுதிப் பரிசோதனைகள் குரங்குகளை கொண்டு முன்னெடுக்கப்படும். மூன்றாம் தலைமுறை ஆய்வுகளுக்கு குரங்குகள் பயன்படுத்தப்படும்.

மனிதனுக்கும் குரங்குகளுக்கும் அறிவியல் ரீதியில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஆகவே விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்காக குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

குரங்குகளுக்கு பதிலாக நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை ஏற்றுமதி செய்ய வேண்டும். அரசியல்வாதிகளின் மூளையை உணவுக்கு பயன்படுத்த முடியாது. ஏனெனில் அரசியல்வாதிகளுக்கு மூளை என்பதொன்று கிடையாது. அரசியல்வாதிகள் விஞ்ஞான ஆய்வுகளுக்காக பயன்படுத்தினால் நாட்டுக்கு ஏதும் பயன் கிடைக்கும்- என்றார்.

(அ)

# சிவாஜி கணேசன் குறித்த நூல் யாழ். பல்கலையில் அறிமுகம்

## ராம்குமார் கணேசனும் கலந்துகொள்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 20

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் முனைவர் மருதுமோகன், சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய "சிவாஜி கணேசன்" எனும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

நடிகர் திலகத்தின் மகன் ராம்குமார் கணேசன் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவதற்காக வருகை தருகிறார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து "நீங்கா நினைவில் சிவாஜி" என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புரை இடம்பெறும்.

நூலாசிரியர் அறிமுகத்தை சிவா பிள்ளை நிகழ்த்த, நூல் அறிமுக உரையை முனைவர் கா.வெ.செ. மருதுமோகன் நிகழ்த்துவார். யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நூலை வெளியிடுவார். ராம்குமார் சிவாஜி கணேசன் பிரதிகளைக் கையளிப்பார்.

முனைவர் கோ.சகாதேவி, முத்தையாபிள்ளை சிறிகாந்த், தேவராயபிள்ளை லெட்சுமணன்ராஜ், டாக்டர் சதீஸ்குமார் சிவலிங்கம், முனைவர் மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள்.




இதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறும். செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலி லலீசன் இதற்குத் தலைமைதாங்குவார்.

ஆர்வமுள்ள அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# 20 வருடங்கள் கடந்தும் பதவி உயர்வு இல்லை!

## சிறை அதிகாரிகள் விசனம்

கொழும்பு, ஏப். 20

பொலிஸ் திணைக்களத்தில் 12 வருடங்களை பூர்த்தி செய்த கான்ஸ்டபிள்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள போதும் 20 வருடங்கள் கடந்த பின்னரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை என பல்லேகல சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது சிறை நிர்வாகம் கீழ்மட்ட அதிகாரிகளை பொருட்படுத்தாத நிலையை அடைந்துள்ளதாகவும், தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு உயர் அதிகாரிகள் தமது பிரச்னைகளை அமைச்சரிடம் கூற முற்படுவதில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளரை உடனடியாக மாற்றவேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

(அ)

# விசேட வைத்தியர்கள் இல்லாமையால் நோயாளிகள் வேறு வைத்தியசாலைக்கு

கொழும்பு, ஏப். 20

அம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை விசேட வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் அவசரமாக சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் பண்டார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இவ்வாறான நோயாளர்கள் கராப்பிட்டிய, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

வைத்தியசாலையின் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக அவசர மற்றும் அவசர சத்திர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை வைத்தியசாலைக்கு பரிந்துரைப்பதை தவிர்க்குமாறும் வைத்தியசாலை பணிப்பாளர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அதிக வெப்பநிலை காரணமாக இதயநோய் அதிகரிக்கும் ஆபத்து!

கொழும்பு, ஏப். 20

இந்த நாட்களில் நாட்டை பாதித்துள்ள அதிக வெப்பநிலையுடன் பக்கவாதம் மற்றும் இதயநோய்கள் ஏற்படும் அபாயம் அதிகம் என அரசாங்க ஆயுர்வேத வைத்தியர் சங்கத்தின் சமூக சுகாதார செயலாளர் வைத்தியர் சேனக கமகே தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன் திறந்த வெளியில் பணி புரிபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்களில் பல்வேறு பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வெளிப்புற விளையாட்டுகளைத் தவிர்க்குமாறு ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் .

மேலும், தர்ப்பூசனி, ஒரஞ்சு, இளநீர் போன்ற உள்ளூர் பானங்களை முடிந்தவரை அருந்துவது நல்லது.

குழந்தைகளுக்கு நீர்ச்சத்து குறையாமல் இருக்க கொத்தமல்லி, கஞ்சி போன்றவற்றை வழங்கவேண்டும்-என்றார்.

(அ)

# பள்ளிவாசலுக்கு வெடிகுண்டு மிரட்டல் அலவத்துகொட பொலிஸ் விசாரணை

கொழும்பு, ஏப். 20

மத்திய மாகாணத்தில் உள்ள அலவத்துகொட பள்ளிவாசலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பாக புலனாய்வுத் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெடிகுண்டு மிரட்டல் குறித்து அலவத்துகொட பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் அழைப்பு கிடைத்தது என்றும் இதனை அடுத்து விரைவான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவுறுத்தினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அச்சுறுத்தல் தொடர்பான தகவல் கிடைப்பதற்கு முன் உளவுத்துறைத் தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை என அலவத்துகொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கூறினார்.

இருந்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வெடிகுண்டு மிரட்டல் குறித்து உளவுத்துறைக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

தற்போது வரை, பள்ளிவாசலுக்கு அருகாமையில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ அல்லது அச்சுறுத்தல் தொடர்பாக யாராவது கைது செய்யப்பட்டதாகவோ எந்தத் தகவலும் இல்லை.

சந்தேகத்திற்கிடமான செயல்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவிக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

(அ)

# தேசிய அரசு உருவாக்கப்படின் பெரமுனவுக்கே முன்னுரிமை!

## கூறுகின்றார் காமினி லொக்குகே




கொழும்பு, ஏப்.20

**தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டால் பொதுஜன பெரமுன கட்சிக்கே முன்னுரிமை வழங்கவேண்டும். ஏனெனில் ஜனாதிபதியை தெரிவு செய்தது நாமே என பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே வலியுறுத்தியுள்ளார்.**

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். குறுகிய காலத்துக்குள் நாடு வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது.

நெருக்கடியான நேரத்தில் சவால்களைப் பொறுப்பேற்காத தரப்பினர் தற்போது அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயார் என குறிப்பிடுகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாக பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரசாங்கம் ஸ்திரமான தன்மையில் காணப்படவேண்டும்.

சகல தரப்பினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 25 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்துவார்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது-அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்தபோது எவரும் ஒன்றிணையவில்லை. நாடு வழமைக்கு திரும்பிய பின்னர் தற்போது அரசாங்கத்துடன் இணைய எதிர்த்தரப்பினர் அவதானம் செலுத்தியுள்ளார்கள்-என்றார். (அ)

*204 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கி*

# 172 அபிவிருத்தி திட்டங்கள் 2025 இற்கு முன்னர் பூர்த்தி

கொழும்பு, ஏப். 20

2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் 204 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கிய 172 அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 21 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குருவிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த மார்ச் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

மேலும், பெல்மடுல்லஃகஹவத்தை அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், ரம்புக்கனை, குளியாப்பிட்டிய, தலாவ, கெக்கிராவ, வெலிமடை, பண்டாரவளை, வெள்ளவாய, நாவலப்பிட்டி, குண்டசாலை, கம்பளை, வவுனியா, கிளிநொச்சி, அம்பலாங்கொடை, மாத்தறை, கட்டான-சீதுவ, ஜா எல, வத்தளை-மாபோல, கம்பஹா ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள். இந்த ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ளன.

அத்துடன், இவ்வருட இறுதிக்குள் நுவரெலியா மற்றும் அறுகம்பேயின் அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானி மூலம் வெளியிடப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அதன் செயல்பாடுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

2021-2022 இரண்டு ஆண்டுகளில், நகர அபிவிருத்தி அதிகாரசபை வர்த்தமானி மூலம் 32 அபிவிருத்தித் திட்டங்களை வெளியிட்டுள்ளது. கடந்த வருடம் மட்டும் 9 அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

கந்தளாய், தெஹிவளை-கல்கிஸை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, மஹரகம, ஹோமாகம, கஸ்பேவ, நுவரெலியா, தம்புள்ளை, கொழும்பு அபிவிருத்தித் திட்டம் என்பன கடந்த வருடம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களாகும்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நகர அபிவிருத்தி நிர்வாகப் பிரதேசமாக நியமிக்கப்படும் எந்தவொரு பிரதேசமும் நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும்.

உண்மையான அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு மிகவும் பயனுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானோர் தப்பமுடியாது

## அமைச்சர் விஜயதாஸ திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 20

கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலுக்கு காரணமானவர்கள் எவரும் தப்பமுடியாதென நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்டிருந்த விசாரணைகளில் கத்தோலிக்க திருச்சபை திருப்தியடையவில்லை என்றாலும், இது தொடர்பாக பல நியாயமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பவத்தின்போது கடமையை புறக்கணித்த அதிகாரிகள் தொடர்பாக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாகவும் விஜயதாஸ தெரிவித்தார்.

தாக்குதல் இடம்பெற்ற போது சேகரிக்கப்பட்ட அனைத்து தகவல்களும் அடங்கிய அறிக்கை பொலிஸ்துறைக்கு பொறுப்பான அமைச்சரால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையை ஆயர்கள் மாநாட்டில் வழங்க உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# மாலைதீவு கலாசார நிலையத்தை இலங்கையில் அமைக்க அனுமதி!

கொழும்பு, ஏப். 20

இலங்கையில் மாலைதீவு கலாசார நிலையமொன்றை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கலாசார மற்றும் கலை விவகாரங்கள் தொடர்பான பயிற்சி வாய்ப்புக்களை வழங்கல், விளையாட்டுக்களுக்கான வசதியளித்தல் உள்ளிட்ட மாலைதீவின் கலாசார நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இரு தரப்பினருக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன் புரிந்துணர்வு ஒப்பந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

அதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# யாழ்.மாநகரசபை முன் ஒருவர் உண்ணாவிரதம்



யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு முன்பாக நபர் ஒருவர் நேற்றுக் காலை முதல் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் வசிக்கும் குறித்த நபரின் வீட்டுக்கு அருகில் அனுமதி பெறப்படாத கட்டடம் ஒன்றும் உள்ளதாகவும், அந்த கட்டடத்தின் கழிவு நீர் தன்னுடைய வீட்டுக்குள் வருவதாகவும். இதனை மாநகர சபையிடம் பல்வேறு தடவைகள் முறையிட்டும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இதனாலேயே ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதாகவும் அவர் கூறினார்.

தனக்கான தீர்வு கிடைக்கப் பெறவில்லை என்றால் எதிர்வரும் காலத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நபருடன் யாழ்.மாநகரசபை அதிகாரிகள் கலந்தாலோசித்தபோதிலும் அவர் தொடர்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

(அ)




# அன்னை பூபதியின் நினைவுதினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு

வவுனியா, ஏப். 20

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் நேற்று அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டு வரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக உள்ள பந்தலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னை பூபதியின் உருவ படத்திற்கு ஒளி தீபம் ஏற்றி மலர் அஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

(அ)

# கிணற்றில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப்ரல் 20

மொனராகலை மெதகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோட்டபோவ பிரதேசத்திலுள்ள கிணற்றிலிருந்து ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கோட்டபோவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கிணற்றில் சடலம் ஒன்று மிதப்பதாக 119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு வழங்கப்பட்டத் தகவலையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

(அ)



# மன்னாரிலும் அன்னைக்கு அஞ்சலி

மன்னார், ஏப். 20

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உண்ணா நோன்பு இருந்து உயிர் தியாகம் செய்த தியாக தீபம் அன்னை பூபதியின் 35 ஆவது ஆண்டு நினைவுதினம் மன்னாரில் நேற்று புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தியாக தீபம் அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. கட்சியின் உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் இதில் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தியாக தீபம் அன்னை பூபதி நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்திலும் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் மதத் தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு மலர் தூவி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (அ)

# அரசாங்கத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மனு!

கொழும்பு, ஏப். 20

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின், அரசாங்கத்துக்கு சொந்தமான பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு எதிராக, ரெலிகொம் ஐக்கிய தொழிற்சங்கம் நேற்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

சட்டமா அதிபர், திறைசேரிச் செயலாளர், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை, தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தலைவர் உட்பட 34 பேர் இதில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேலும் 49.5 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்பதன் மூலம் மக்களின் தகவல் தொடர்புத் தேவைகளில் பெரும்பகுதியை வழங்கும் நிறுவனம், அரசின் கட்டுப்பாட்டில் இருந்து இழக்கப்படும் என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனுவை பொதுநலன் தொடர்பான அவசர வழக்காக விசாரிக்கவேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# ‘13’ நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டில் இனக்கலவரம் வெடிக்கும்

## எச்சரிக்கின்றார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஏப். 20

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான அமைச்சரவை உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இதனைக் கைவிடவேண்டும். அதனையும் மீறி 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத இனக் கலவரம் வெடிக்கும்.”**

-இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நல்லிணகத்தை 3 கட்டங்களாக ஏற்படுத்துவதற்காக அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார். அதில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் உள்ளடங்குகின்றது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் விமல் வீரவன்ஸவிடம் ஊடகங்கள் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை எக்காரணம் கொண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்த அனுமதிக்கமாட்டோம். அமைச்சரவை உபகுழுவை நியமித்து 13 ஐ நடைமுறைப்படுத்த ரணில் அரசு வகுத்துள்ள வியூகத்துக்கு எமது கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இலங்கையில் வரலாறு காணாத இனக்கலவரம் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கின்றோம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் போல் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். அது 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக அவர்களுக்கு நேரடி உரிமைகள் வழங்க வேண்டிய அவசிய மில்லை-என்றார். (அ)

### இளைஞரை சுட்டுக்கொன்றது யார்?

# இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் 36 துப்பாக்கிகள் சோதனைக்காக பறிமுதல்

கொழும்பு, ஏப். 20

கடந்த 14ஆம் திகதி மித்தரமுல்ல, அஹூங்கல்ல பிரதேசத்தில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்றது தொடர்பான விசாரணையில் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்ட மோப்ப நாய், கரந்தெனிய இராணுவப் புலனாய்வுப் பிரிவு முகாமுக்குள் நுழைந்ததையடுத்து, அந்த முகாமின் சிப்பாய்களுக்கு வழங்கப்பட்ட 36 ரி-56 துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொலை இடம்பெற்ற தினத்தன்று கடமையில் இருந்த படையினருக்கு வழங்கப்பட்ட ரி-56 ஆயுதங்கள் பரிசோதனைக்காக கைப்பற்றப்பட்டதாக காலி பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மித்தரமுல்ல, அஹூங்கல்ல, அமரமொழி மாவத்தையில் வசிக்கும் தரிந்து தனுஷ்க சில்வா, மாலை 6 மணியளவில் தனது சகோதரியின் இரண்டு குழந்தைகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மோட்டார் சைக்கிளில் இருந்து சரிந்து விழுந்த போது, மோட்டார் சைக்கிளில் இருந்த ஐந்து வயது மற்றும் ஒன்றரை வயதுடைய இரண்டு பிள்ளைகளும் காயமடைந்து பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை மாலை, கொலைச் சந்தேகநபர்கள் வந்த மோட்டார் சைக்கிள், கரந்தெனிய, ஆரவ்வல இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு அருகிலுள்ள காணியொன்றில் கிடந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பொலிஸார் மோப்பநாயை பயன்படுத்தி விசாரணையில் ஈடுபட்டனர். மோப்ப நாய் இராணுவ முகாமுக்குள் பிரவேசித்துள்ளது. இதையடுத்து, அன்றையதினம் கடமையில் இருந்த இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட 36 ரி-56 துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தினால் துப்பாக்கிகளை அரசாங்க பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# யாழில் வெள்ளை ஈ தாக்கத்தால் 5 ஆயிரம் தென்னைகள் பாதிப்பு!

## தெங்கு பயிர்ச்செய்கை சபை தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ் மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கத்தினால் கிட்டத்தட்ட 5,000 தென்னைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 75 வீதமான பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு கட்டுப்படுத்தல் செயற்திட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும் தெங்கு பயிர்ச்செய்கைச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈ தாக்கத்தினால் தென்னை மரம் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றது. இந்த வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் வடக்கு மாகாணத்தில் அதுவும் யாழ்.நகரப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் வெள்ளை ஈ தாக்கம் கண்டு பிடிக்கப்பட்டு உடனடியாக அதனைக் கட்டுப்படுத்தும் செயன்முறைகளைச் செயற்படுத்தினோம்.

ஆனாலும் அது பரவலடைந்து தற்போது யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலும் பரவி உள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

தொடர்ச்சியாக இந்த வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

கிட்டத்தட்ட யாழில் 1500 தென்னை மரங்களுக்கு இந்த கட்டுப்படுத்தல் செயற்திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். எனினும் வெள்ளை ஈ தொடர்ச்சியாக பரவிக்கொண்டு செல்கின்றது.

வெள்ளை என்பது ஒரு வெள்ளை இலையான் எனக் குறிப்பிடலாம். இது நான்கு வகைகளில் உள்ளது. இது தென்னையை மட்டும் தான் தாக்கும். இது கூடுதலாக முட்டை போட்டு குடம்பியாக்கி இனப்பெருக்கத்தை அதிகரித்து தென்னை மரத்தின் அடிப் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக செவ்விளனி மரங்களை கூடுதலாக தாக்குகின்றது.

ஒரு வீட்டில் இரண்டு மூன்று தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் ஏற்படுமாக இருந்தால் தென்னை வளம் முற்றாக பாதிக்க கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் தற்போது தென்னை வளம் சற்று பெருகி கொண்டு செல்கின்றது. எனவே இந்த வெள்ளை ஈ தாக்கம் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்-என்றார். (அ)

# சட்டம் அமுலாக்கும் அதிகாரம் கர்தினால்களுக்கு கிடையாது!

## மைத்திரிபால காட்டமான கருத்து

கொழும்பு, ஏப். 20


உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் நீதித்துறைக்கும், பிரதம நீதியரசருக்குமே உண்டு என்றும், கர்தினால்களுக்கு அல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அபராதம் செலுத்தாவிட்டால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும் என்றும், நீதிமன்றத்தை மதித்து அபராதம் செலுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

இதேவேளை, இந்த வருடம் மேதினக் கூட்டத்தைக் கண்டியில் ஏற்பாடு செய்துள்ளதாவும் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# அமெரிக்காவை விட்டு விலகி சீனாவை நெருங்குகிறதா சவூதி? பட்டத்து இளவரசரின் கனவு என்ன?



2022 மார்ச் 10 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் தூதாண்மை உறவுகளை மீண்டும் தொடங்குவதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டது. இந்த இரு நாடுகள் மீது மட்டுமல்லாமல், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஒட்டுமொத்த உலக முறைமை மீதும் இந்த ஒப்பந்தத்தின் தாக்கம் இருக்கும்.

இந்த ஒப்பந்தம் எந்தவொரு மேற்கத்திய நாடுகளின் மத்தியஸ்தத்துடனும் செய்யப்படவில்லை, இது சீனாவின் மத்தியஸ்தத்துடனேயே நடந்துள்ளது. அமெரிக்காவுடனான சீனாவின் உறவு கடந்த பல ஆண்டுகளாக பதற்றமாக உள்ளது.

ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையே மதம் மட்டுமின்றி அரசியல் வேறுபாடுகளும் இருந்து வந்துள்ளன. சவூதி அரேபியா மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கிய உறவைக் கொண்ட ஒரு முடியாட்சியாக இருக்கும்போது, ஈரான் ஒரு இறைமை ஆட்சி நாடு அதாவது மத நடைமுறை உள்ள நாடு.

அமெரிக்கா தனது எதிரிகளின் பிரிவில் ஈரானை வைத்திருக்கிறது.

உக்ரேன் போரின் போது ஈரான் ரஷ்யாவை ஆதரித்தது. இதன் காரணமாகவும் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகள் அதன் மீது கோபமாக உள்ளன.

இதனுடன் பிராந்தியத்தில் மேலாதிக்கத்திற்காக, ஈரான் மற்றும் சவூதி அரேபியா இடையே பல ஆண்டுகளாக யேமனில் சண்டை இருந்து வருகிறது.

ஆனால் இப்போது இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. அதன் பெருமை சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மானுக்குச் செல்கிறது. அவர் எம்.பி.எஸ் என்றும் அழைக்கப்படுகிறார்.

சவூதி அரேபியா தொடர்பாக பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அதாவது எம்பிஎஸ்ஸின் கனவு என்ன என்பதை இந்த வாரம் தெரிந்துகொள்ள முயற்சிப்போம்.

### முகமது பின் சல்மான் யார்?

சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் 2015இல் ஆட்சியில் அமர்ந்தபோது அது ஒரு எதிர்பாராத நிகழ்வாக இருந்தது. ஏனெனில் அவர் ஏழு சகோதரர்களில் இளையவர் மற்றும் வாரிசுரிமைக்கு மிகக் குறைந்த உரிமையைக் கொண்டிருந்தார். ஆனால் அவர் ஆட்சிக்கு வரும் போது அவருக்கு வயது எண்பது.

அவர் சவூதி அரேபியாவின் சிம்மாசனத்தில் அமர்ந்தவுடன் பட்டத்து இளவரசரை நியமிப்பது அவரது முதல் பொறுப்பாக இருந்தது. அவர் தனது மூன்றாவது மனைவிக்கு பிறந்த மூத்த மகனான முகமது பின் சல்மானை தனது வாரிசாக அறிவித்தார். சவூதி அரேபியாவில் இறுதி முடிவெடுப்பவராக தற்போது அவர்தான் பார்க்கப்படுகிறார்.

இளவரசர் முகமது பின் சல்மானின் வயது ஏறக்குறைய முப்பது. வால் ஸ்ட்ரீட் ஜர்னலின் மத்திய கிழக்கு நிருபர் ஸ்டீபன் கெய்லின், இளவரசரின் இளமை அவரது தலைமைத்துவ பாணியில் பிரதிபலிக்கிறது என்று கூறுகிறார்.

“எம்பிஎஸ், மில்லினியல் தலைமுறையைச் சேர்ந்தவர். நவீன தொழில்நுட்பம் மற்றும் போக்குகளை நன்கு அறிந்தவர். சவூதி அரேபியாவின் மக்கள் தொகையில் எழுபது சதவிகிதம் பேர் முப்பது வயதுக் குட்பட்டவர்கள். எம்.பி.எஸ் தன்னை அவர்களின் பிரதிநிதியாகப் பார்க்கிறார். அவர் அவர்களை ஈர்க்க விரும்புகிறார். அவர்களை மனதில் வைத்துக்கொண்டு முடிவுகளை எடுக்க விரும்புகிறார்,”



என்றார் அவர்.

தனது இமேஜை மனதில் வைத்துக் கொண்டு சவூதி அரேபியாவின் பொருளாதாரத்தை தாராளமயமாக்க எம்.பி.எஸ் திட்டம் வகுத்துள்ளார். கச்சா எண்ணெய் நாட்டின் முக்கிய ஏற்றுமதியாகும். நாட்டின் பொருளாதாரம் அதை சார்ந்திருப்பதை குறைக்க அவர் விரும்புகிறார்.

*“2016 ஆம் ஆண்டில், அவர் 'விஷன் 2030' என்ற முன்னோடி பொருளாதார மற்றும் சமூக மாற்றத் திட்டத்தை அறிவித்தார். இதன் கீழ் அவர் பொருளாதார மற்றும் சமூக தாராளமயமாக்கல் இலக்குகளை அமைத்துள்ளார்.”* என்று ஸ்டீபன் கெய்லின் கூறுகிறார்.

### சவூதி இளவரசரின் நோக்கம் என்ன?

தொழில்துறையில் சவூதி அரேபியா வளர்ச்சியடைய, தொழிலாளர் மற்றும் பொதுத்துறையில் பெண்கள் சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக மகளிர் தொடர்பான விதிகளை தளர்த்த எம்பிஎஸ் முடிவு செய்தார்.

“பெண்கள் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் முன்பும் சேரலாம். ஆனால் அவர்கள் வேலை செய்வது தொடர்பாக நிறைய கட்டுப்பாடுகள் இருந்தன. சவூதி அரேபியாவின் தொழிலாளர் படையில் பெண்கள் சுமார் 37 சதவிகிதம் உள்ளனர். முன்னதாக அவர்கள் வாகனம் ஓட்ட தடை விதிக்கப்பட்டிருந்தது. எனவே அவர்கள் வேலைக்கு செல்ல ஒரு டிரைவர் தேவைப்பட்டார். இப்போது இந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டது. பெண்கள் தாங்களாகவே வாகனத்தை ஓட்டிக்கொண்டு வேலைக்குச் செல்லலாம்,” என்று ஸ்டீபன் கெய்லின் தெரிவித்தார்.

இந்த முடிவுகள் நாட்டின் பல சமூக மரபுகளை உடைத்துவிட்டன என்பது வெளிப்படையானது. இந்த முடிவுகள் தொடர்பாக மதத் தலைவர்கள் அல்லது பிற துறைகளில் இருந்து வரும் எதிர்ப்பை நசுக்க அவர் தயாராக இருந்தார். நாட்டின் செல்வந்தர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க பிரிவினர் மீதும் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட அவர் விரும்பினார்.

2017 ஆம் ஆண்டு நவம்பரில் தலைநகர் ரியாத்தில் உள்ள ரிட்ஸ் கார்ல்டன் ஹோட்டலில் நாட்டின் பணக்கார மற்றும் செல்வாக்கு மிக்க 200 க்கும் மேற்பட்டவர்களை அவர் தடுப்புக்காவலில் வைத்தார். தாங்கள் தாக்கப்பட்டதாகவும், சித்திரவதை செய்யப்பட்டதாகவும், மிரட்டப்பட்டதாகவும் இவர்களில் பலர் பின்னர் குற்றம் சாட்டினர்.

இந்த சர்ச்சைக்குரிய நடவடிக்கை உலக ஊடகங்களில் விமர்சனத்திற்கு உள்ளானது. ஆனால் நாட்டின் மீது இளவரசர் சல்மானின் பிடி வலுவடைந்தது.

இந்த சம்பவத்திற்கு சில வாரங்களுக்கு முன்பு, வாரிசு வரிசையில் தனக்கு முன்னால் இருந்த தனது மூத்த உறவினரை வெளியேற்றியதுடன், பல மதத் தலைவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்ததாக ஸ்டீபன் கெய்லின் கூறுகிறார். அவர் தனது அதிகாரத்திற்கு ஏற்படக்கூடிய எல்லா வகையான சவால்களையும் முடித்து வைத்தார்.



ஆனால் அதற்குப் பிறகு நடந்தவை அவரை மேற்கத்திய நாடுகளுடன் மோதல் பாதையில் கொண்டு சேர்த்தன. 2018 அக்டோபரில் சவூதி அரசின் விமர்சகரும் பத்திரிகையாளருமான ஜமால் கஷோகி, இஸ்தான்புல்லில் உள்ள சவூதி தூதரகத்தில் படுகொலை செய்யப்பட்டார். சர்வதேச சமூகம் இந்த படுகொலைக்கு எம்.பி.எஸ் மீது குற்றம் சுமத்தியது.

“அந்த சம்பவம் அவரது நற்பெயர் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இது சவூதி அரேபியாவில் நடந்த, முன்பு கண்டுகொள்ளப்படாமல் இருந்த பிற மனித உரிமை மீறல் விவகாரங்கள் குறித்து உலகின் கவனத்தை ஈர்த்தது. கஷோகியின் கொலைக்குப் பிறகு, கருத்து சுதந்திரத்தை தடுக்கும் நிகழ்வுகள் மீதும் மக்களின் கவனம் திரும்பியது,” என்று ஸ்டீபன் கெய்லின் குறிப்பிட்டார்.

சவூதி அரேபியாவில் அதிக சுதந்திரம் கோரும் பெண்கள் கடுமையாக தண்டிக்கப்படுவது குறித்தும் பேச்சு தொடங்கியது. மறுபுறம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஒரே நாளில் 81 பேர் பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்டு விசாரணையின்றி கொல்லப்பட்டனர்.

இதை மேற்கத்திய நாடுகள் கவனித்தன. உலக கால்பந்து சங்கமான பிபா, 2023 மகளிர் உலகக் கோப்பை போட்டிகளுக்கான, சவூதி அரேபிய சுற்றுலா நிர்வாகத்தின் ஸ்பான்சர்ஷிப்பை ரத்து செய்தது.

ஆனால் இந்த நிகழ்வுகள் எம்.எஸ்பி இன் பொருளாதார தாராளமயமாக்கல் நிகழ்ச்சி நிரலை பாதிக்குமா?

### உலக அரங்கில் சவூதி அரேபியா

சவூதி அரேபியாவின் எதிர்காலத் திட்டங்களில் இந்த ஒப்பந்தம் என்ன பங்கைக் கொண்டிருக்கக்கூடும் என்பதைப் புரிந்து கொள்ள, சவூதி அரேபிவுக்கும் ஈரானுக்கும் இடையிலான சமீபத்திய தூதாண்மை ஒப்பந்தத்திற்குத் திரும்புவோம்.

எங்கள் நிபுணரான டினா அஸ்பாண்டியாரி, சர்வதேச நெருக்கடி குழுவின் மூத்த மத்திய கிழக்கு ஆலோசகர் ஆவார். “இந்த ஒப்பந்தம் மத்திய கிழக்கிற்கு மிகவும் முக்கியமானதாக நிரூபணமாகக்கூடும். ஈரானும் சவூதி அரேபியாவும் பல தசாப்தங்களாக இந்த பிராந்தியத்தில் பரஸ்பர போட்டியாளர்களாக உள்ளன. கடந்த காலங்களிலும் இருவருக்குமிடையிலான தூதாண்மை உறவுகளை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் இருவருக்கும் இடையில் பதற்றம் ஏற்பட்டது. எனவே என்ன நடக்கிறது என்பதை நாம் சில மாதங்களுக்கு பொருத்திருந்து பார்க்க வேண்டும்,” என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் மேற்கத்திய நாடுகளின் கவலைக்கு முதல் காரணம் சீனா இந்த ஒப்பந்தத்தை செய்து வைத்ததுதான். இரண்டாவது கவலை என்னவென்றால், ஈரானின் மேற்கத்திய நாடுகளுடனான உறவு ஏற்கனவே மோசமாக இருந்தது. அந்த நிலையில் உக்ரேன் போரில் அது ரஷ்யாவுக்கு உதவுகிறது.

“அமெரிக்காவுடனான அதன் உறவுகள் ஏற்கனவே ஏற்ற இறக்கங்களைக்கொண்டதாக இருக்கும் நிலையில், சவூதி அரேபியா சீனாவுக்கு நெருக்கமாகச்செல்வது மிகவும் முக்கியமானது. சவூதி அரேபியா அமெரிக்காவிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதத்தை விரும்புகிறது, அதே நேரத்தில் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை வகுக்கவும் விரும்புகிறது. அதற்கு அமெரிக்கா தயாராக இல்லை என்று தோன்றுகிறது. அத்தகைய சூழ்நிலையில் அது மற்ற நாடுகளுடன் தனது உறவை வலுப்படுத்தி வருகிறது. இந்த சூழலில் சீனா அதற்கு முக்கியமானது.” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் இஸ்ரேல் அதை எப்படிப் பார்க்கும், அதற்கு எப்படி எதிர்வினையாற்றும் என்பதைப் பொறுத்தே அவருடைய திட்டம் அமையும். இஸ்ரேல் அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது.

ரஞ்சன் அருண் பிரசாத்

# முரளிதரன் '800': விஜய் சேதுபதி முதல் இன்று வரையிலான சவால்களும் பட தயாரிப்பின் சமீபத்திய நிலையும்






பைலட் பிரேம்நாத், நங்கூரம், தீ, மோகனப் புன்னகை போன்ற இலங்கை - இந்திய கூட்டு தயாரிப்பில் உருவான சுமார் 10திற்கும் மேற்பட்ட தமிழ் திரைப்பட வரிசையில் 800 திரைப்படமும் இடம் பிடிக்கின்றது.

இலங்கையிலிருந்து உருவான பிரபல்யங்களுக்கு மத்தியில், இலங்கையின் விளையாட்டுத்துறையில் பாரிய சவால்களுக்கு மத்தியில் தனக்கென்று இடத்தை பிடித்து, வரலாற்றில் இடம்பிடித்தவர் முத்தையா முரளிதரன்.

1972ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் தேதி இலங்கையின் மலையக பகுதியான கண்டியில் பிறந்தார் முத்தையா முரளிதரன்.

பாடசாலை வாழ்க்கையில் கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் காட்டிய முத்தையா முரளிதரன், கிரிக்கெட் கழக போட்டிகளில் விளையாடியதன் ஊடாக, 1992ம் ஆண்டு இலங்கை தேசிய அணியில் இடம்பிடித்தார்.

அன்று முதல் தனது கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த அவர், 2010ம் ஆண்டு தனது ஓய்வை அறிவித்தார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 800 விக்கெட்களை பெற்ற முதலாவது வீரர் என்ற பெருமையை முத்தையா முரளிதரன் பெற்றுக்கொண்டார்.

800 விக்கெட்களை பெற்று சாதனையை நிலைநாட்ட 8 விக்கெட்கள் மாத்திரமே எஞ்சியிருந்த நிலையில், முத்தையா முரளிதரன் அடுத்த போட்டியுடன் தான் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், இலங்கையின் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற முத்தையா முரளிதரனின் இறுதிப் டெஸ்ட் போட்டியில், யாரும் எதிர்பார்க்காத விதத்தில் 8 விக்கெட்களை பெற்று, 800 விக்கெட்களை பெற்ற உலக சாதனையை நிலைநாட்டி, வரலாற்றில் இடம்பிடித்தார்.

800 விக்கெட்களை பெற்ற வீரர் என்ற அடிப்படையிலேயே, முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாறை பிரதிபலிக்கும் வகையில் எடுக்கப்படும் திரைப்படத்திற்கு 800 என பெயரிடப்பட்டுள்ளது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இந்த திரைப்படம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக படக்குழு தெரிவிக்கின்றது.

### 800 திரைப்படம் எதிர்கொண்ட சவால்கள்

இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் என அடையாளப்படுத்தப்பட்ட முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கும் வகையிலான திரைப்படத்தை எடுக்க 2020ம் ஆண்டு திட்டமிடப்பட்டது.

இந்தி திரைப்படத்தில் முத்தையா முரளிதரனின் கதாபாத்திரத்திற்காக மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடிக்க ஒப்பந்தமாகியிருந்தார்.


எனினும், இந்த திரைப்படம் தொடர்பான அறிவிப்பு வெளியான நிலையில், அதற்கு எதிராக தமிழகத்தில் மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்கள் வாழும் தேசங்களிலும் பாரிய எதிர்ப்புக்கள் வெளியாகியிருந்தன.

ஈழப் போராட்டத்தின் போது, முத்தையா முரளிதரன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு பதிலாக, இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி, தமிழர்களை காட்டிக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அவருக்கு எதிராக கடும் எதிர்ப்புக்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு வெளியான எதிர்ப்புக்கள் அந்த காலப் பகுதியில் உலக வாழ் தமிழர்கள் மத்தியில் பேசுப் பொருளாக மாறியது.

இதையடுத்து, 2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் தேதி முத்தையா முரளிதரன் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

"என் மீதுள்ள தவறான புரிதலால் 800 படத்தில் இருந்து விலக வேண்டும் என நடிகர் விஜய் சேதுபதி அவர்களுக்கு சில தரப்பிலிருந்து கடுமையான அழுத்தம் தருவதை நான் அறிகிறேன். எனவே என்னால் தமிழ் நாட்டின் ஒரு தலைசிறந்த கலைஞன் பாதிப்படைவதை நான் விரும்பவில்லை. அது மட்டுமல்லாது விஜய் சேதுபதி அவர்களின் கலை பயணத்தில் வருங்காலங்களில் தேவையற்ற தடைகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதையும் கருத்தில் கொண்டு, இத்திரைப்படத்தில் இருந்து விலகிக் கொள்ளுமாறு அவரை கேட்டுக்கொள்கின்றேன்," என முத்தையா முரளிதரன் அன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.




"ஒவ்வொரு முறை எனக்கு ஏற்படும் தடைகளால் ஒரு போதும் நான் சோர்ந்துவிடவில்லை. அதை அனைத்தையும் எதிர்கொண்டு வென்றே இந்த நிலையை என்னால் எட்ட முடிந்தது. இத்திரைப்படம் எதிர்கால தலைமுறையினருக்கும், இளம் கிரக்கெட் வீரர்களுக்கும் ஒரு உத்வேகத்தையும் மன உறுதியையும் அளிக்கும் என எண்ணியே எனது சுயசரிதையை திரைப்படமாக்க சம்மதித்தேன். அதற்கு இப்போது தடைகள் ஏற்பட்டிருக்கின்றது. நிச்சயமாக இந்த தடைகளையும் கடந்து இந்த படைப்பை அவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பார்கள் என நம்புகிறேன்." என முத்தையா முரளிதரன் அன்று நம்பிக்கை வெளியிட்டார்.

800 திரைப்படத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு முத்தையா முரளிதரன் தனது டுவிட்டர் பக்கத்தில் கடிதமொன்றை பதிவிட்டு, கூறிய நிலையில், நடிகர் விஜய் சேதுபதி அதற்கு 'நன்றி.. வணக்கம்" என பதிலளித்திருந்தார்.

இந்த அறிவிப்புடன், முத்தையா முரளிதரனின் 800 திரைப்படத்திலிருந்து விஜய் சேதுபதி அதிகாரபூர்வமாக விலகிக்கொண்டார்.

"நன்றி, வணக்கம் என்று டிவிட்டரில் போட்டிருக்கிறேன். அப்படியென்றால் எல்லாம் முடிந்து விட்டது. புள்ளி வைக்கப்பட்டு விட்டது. இனி இதில் பேச ஒன்றுமில்லை" என நடிகர் விஜய் சேதுபதி, பின்னரான சந்தர்ப்பமொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்த திரைப்படத்தின் நாயகனாக மதுர் மித்துன் ஒப்பந்தமாகினார்.

அதனைத் தொடர்ந்து, படத்தின் ஆரம்பகட்ட படப்பிடிப்பு நடவடிக்கைகள் கொரோனா பெருந்தொற்று காரணமாக தாமதமடைந்து, 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் தேதி தொடங்குவதற்கான ஆயத்தங்களை படக்குழு செய்திருந்தது.

எனினும், பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த நிலையில், மீண்டும் படப்பிடிப்பு நடவடிக்கைகள் தாமதமாகும் அபாயத்தை எதிர்நோக்கியது.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார விநியோக தடை, எரிவாயு இன்மை, போக்குவரத்து பிரச்னைகள் என பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்ட நிலையில், கொழும்பு காலி முகத்திடல் போராட்டம் ஆரம்பமானது. அந்த காலப் பகுதியிலேயே 800 திரைப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்புக்களை கொழும்பில் ஆரம்பிக்க படக்குழு தயாராகியிருந்தது.

எனினும், போராட்டத்தினால் படப்பிடிப்புக்களை கைவிட ஒரு தருணத்தில் படக்குழு தயாராகியதாக நம்ப தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இறுதித் தருணத்தில் படப்பிடிப்புக்களை நிறுத்தாது, நெருக்கடிக்கு மத்தியிலும் படப் பிடிப்பு நடவடிக்கைகளை, திட்டமிட்ட தேதியில் படக்குழு ஆரம்பித்துள்ளது.

போக்குவரத்துக்கு எரிபொருள் கிடைக்காமையினால், தாம் வரிசைகளில் பல நாட்கள் காத்திருந்து தமது வாகனங்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொண்டதாகவும், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக எதிர்நோக்கிய எரிவாயு தட்டுப்பாட்டிற்கும் மத்தியில் நூற்றுக்கணக்கான படக்குழுவினருக்கு உணவுகளை உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றயதாகவும் இந்த படத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பு நிறுவனமான ஐங்கரன் மீடியா பிரைவிட் லிமிட்டட் நிறுவனம் தெரிவிக்கின்றது.

கொழும்பில் 17 நாட்களும், கண்டியில் 30 நாட்களும், காலியில் 10 நாட்களும் படப் பிடிப்புக்கள் நடத்தப்பட்டதுடன், பிரித்தானியாவிலும் படப்பிடிப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன், இந்தியாவின் கேரளா பகுதியிலும் படப்பிடிப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன.

### புதிய நாயகன்

மூவி ட்ரைன் மோசன் பிக்சர்ஸ் தயாரிப்பில், இயக்குநர் எம்.எஸ். சிறிபத்தியின் இயக்கத்தில் ஆர்.டி.ராஜ்சேகரின் ஒளிப்பதிவில், ஜிப்ரானின் இசையில் இந்த திரைப்படம் உருவாகியுள்ளது.

படத்தின் முத்தையா முரளிதரனின் கதாபாத்திரத்திற்கு மதுர் மித்துன் ஒப்பந்தமாகினார். முத்தையா முரளிதரனின் மனைவியான மதிமலரின் கதாபாத்திரத்திற்கு மகிமா நம்பியார் நடித்துள்ளார்.

அத்துடன், மூத்த கலைஞர்களான நாசர், வடிவுகரசி, வேலு ராமமூர்த்தி, அருள்தாஸ், தீலிபன், முத்தையா முரளிதரனின் சிறு வயது கதாபாத்திரத்தில் ரித்து ராக்ஸ் உள்ளிட்ட பல கலைஞர்கள் நடித்துள்ளனர்.

அதேவேளை, இலங்கை கலைஞர்களான கிங் ரத்ணம், ஷியா உல் ஹசன், சந்திரஹாசன், ஆதிலக்ஷ்மன், மிஷால் பெரேரா, ஹரேன் விஜேந்திரா, டாக்டர் அனுஷாந்தன் உள்ளிட்ட 60திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கலைஞர்களும் இந்த திரைப்படத்தில் நடித்துள்ளனர்

திரைப்படத்தில் முழுமையான படிப்பிடிப்புக்கள் முடிவடைந்த நிலையில், தற்போது ஒலிபதிவு நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருவதாக படக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

800 திரைப்படத்தை இந்த ஆண்டு நடுப்பகுதியில் வெளியிடுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. படத்தை தென்னிந்தியாவின் பிரபல திரைப்பட வெளியிட்டு நிறுவனமொன்றுடன் இணைந்து வெளியிடுவதற்கு படக்குழு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ், இந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளில் படத்தை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டு ஒலிபதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### இலங்கை சினிமாவில் புதிய மைல் கல்

இலங்கை சினிமாத்துறையானது, பெரும்பாலும் இந்திய சினிமாத்துறையை சார்ந்தே தமது படைப்புக்களை செய்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக இலங்கையில் எடுக்கப்படுகின்ற திரைப்படங்களில், பெரும்பாலும் சிங்கள திரைப்படங்களுக்கே அதிக செல்வாக்கு காணப்படுகின்றது. எனினும், தமிழ் சினிமாத்துறைக்கான வரவேற்பு பெரிதும் குறைவாக காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

எனினும், தென்னிந்திய தமிழ் சினிமாவின் தாக்கம், தமிழ் பேசும் சமூகத்தை மாத்திரமன்றி, சிங்கள சமூகத்தையும் இலங்கையில் தனது ஆளுகைக்கு உட்படுத்தியுள்ளது.

தென்னிந்திய திரைப்படங்கள் பல இலங்கையில் ஒளிபதிவு செய்யப்பட்டுள்ளன.

பைலட் பிரேம்நாத், நங்கூரம், தீ, காக்க காக்க உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்கள் இலங்கையில் படமாக்கப்பட்டுள்ளன. எனினும், இலங்கை பிரபல்யம் ஒருவரின் சுயசரிதையை முதல் தடவையாக பதிவிடும் படமாக வரலாற்றில் இடம்பிடிக்கின்றது முத்தையா முரளிதரனின் 800 திரைப்படம். (பிபிசி)

## பாடப் புத்தகங்கள் அச்சிடுவதற்கான காகிதங்களை இந்தியா வழங்கியது!

கொழும்பு, ஏப். 20

பாடப் புத்தகங்கள் அச்சிடுவதற்கு தேவையான காகிதங்களை இந்திய அரசாங்கம் அளித்துள்ளது.

இந்த காகிதங்கள் கையளிக்கும் நிகழ்வு கல்வி அமைச்சின் மஹரகம களஞ்சியசாலையில் சம்பிரதாயபூர்வமாக அண்மையில் நடைபெற்றது.

இதில் இந்திய அரசின் சார்பில் கலந்துகொண்ட இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ)

## தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்!

### மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 20

நாட்டில் ஏற்பட்டுள்ள அதிக வெப்பமான காலநிலை காரணமாக மக்களின் நாளாந்த தண்ணீர் பாவனை சுமார் 10 வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதன் துணைப் பொது கண்காணிப்பாளர் என். யு. கே. ரணதுங்க மக்கள் முடிந்தவரை தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் நீண்டகாலத்துக்கு பிரச்னையின்றி தண்ணீரை வழங்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## 60,460 போதை மாத்திரைகளுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 20

34 கிலோகிராம் நிறையுடைய 60,460 போதை மாத்திரைகளுடன் நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த திகன பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என தெரியவருகிறது.

ஹெரோயின் போதைப் பொருளுக்கு மாற்றாக பயன்படுத்தும் போதை மாத்திரைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## கல்முனையில் கோழி இறைச்சியின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை

அக்கரைப்பற்று, ஏப். 20

கல்முனை மாநகர சபைப் பிரதேசங்களில் கோழி இறைச்சியின் விலையை கட்டுப்படுத்துவது தொடர்பாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, கோழி இறைச்சி வியாபாரிகளுடன் விஷேட கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

கல்முனை மாநகர பிரதேசங்களில் 01 கிலோ கிராம் கோழி இறைச்சி 1600 வரை அதிகரித்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கோழி இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் மாநகர சபைக்கு அழைக்கப்பட்டு, விலைக் கட்டுப்பாட்டுக்கான சாதக நிலைமை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜௌஸி, வருமான பரிசோதகர்களான ஏ.ஜே.சமீம், எம்.சலீம், எம்.எஸ்.எம்.உபைத், எம்.ரி. சப்னம் சாஜிதா ஆகியோரும் பங்கேற்றனர்.

இதன்போது நோன்புப் பெருநாளை முன்னிட்டு நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டு, சாதாரண மக்களும் கொள்வனவு செய்யும் வகையில் கோழி இறைச்சியின் விலையை முடியுமானவரை குறைத்து விற்பதற்கு வியாபாரிகள் முன்வர வேண்டுமென ஆணையாளர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

தற்போது கோழி உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்திருப்பதால், உற்பத்தி நிறுவனங்களினால் கூடிய விலைக்கே தமக்கு கோழிகள் விநியோகிக்கப்படுவதாகவும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கேள்வி நிரம்பல் காரணமாக சடுதியாக அதிகரித்த கோழி இறைச்சியின் விலை அடுத்த சில தினங்களில் சிறிதளவு குறையும் வாய்ப்பு இருப்பதாகவும் கோழி இறைச்சி வியாபாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். (அ)

## முன்னாள் சட்டமா அதிபர் தப்புல ரி. ஐ. டியில் முன்னிலையாகவில்லை

முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று புதன்கிழமை காலை பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையாகவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து வெளியிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்றைய தினம் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தப்புல டி லிவேராவுக்கு பதிலாக விடயங்களை முன்வைப்பதற்காக சட்டத்தரணி திமித்ர அபேசேகர பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையானார். (ஐ)

## ரமழான் விஷேட பரிசளிப்பு

அக்கரைப்பற்று, ஏப். 20

ரமழான் மாத பாடசாலை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும் என்ற நோக்கில் முஹம்மதிய்யா இஸ்லாமிய நூலகத்தினால் வருடாவருடம் நடத்தப்படுகின்ற மாணவர்களுக்கான தர்பிய்யா நிகழ்ச்சி வழமை போன்று இவ்வருடமும் கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆப்பள்ளிவாசலில் நடைபெற்றது.

தரம் 9, 10 மற்றும் 11 ஆகிய ஆண்டுகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்றிய இத் தர்பிய்யா நிகழ்ச்சியில் அகீதா, பிக்ஹ், ஹதீஸ் மற்றும் துஆ மனனம் ஆகிய வகுப்புகள் நடைபெற்றதுடன், வுழு மற்றும் தொழுகை முறைகள் செய்முறை மூலமாகவும் பயிற்று விக்கப்பட்டன.

இதில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று முதல் இடத்தை ஜே.அப்தாப் அஹமட் தட்டிக் கொண்டார்.

கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் எம்.ஜே. அப்துல் சமட் இதற்கான பணம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

அத்துடன் இரண்டாம் இடத்தை எம்.ஏ. சிமாஸ் அஹமட், மூன்றாம் இடத்தை எம்.எம். ஆகில் ஆகியோருடன் தர வரிசையில் ஏனைய மாணவர்கள் உட்பட அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பணம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (அ)





# இந்தத் தேங்காய் சிதறியது போன்று கணவனை கடத்தியோரும் சிதறுவர்

## எக்னலிகொடவின் மனைவி சந்தியா

அக்கரைப்பற்று, ஏப். 20

**இந்த தேங்காய் சிதறுவதுபோன்று எனது கணவரைக் கடத்தி காணாமல் ஆக்கியவர்களும் சிதறவேண்டும் என சந்தியா எக்னெலிகொட அக்கரைப்பற்று வீரமாகாளி அம்மன் கோயிலில் வேண்டுதல் செய்தார்.**



கடந்த 2010 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட அக்கரைப்பற்று வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக தேங்காய் உடைத்து நேர்த்திக் கடன் நிறைவேற்றினார்.

2010 ஆம் ஆண்டு கடத்தப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் உயிர் அக்கரைப்பற்றில் வைத்தே பிரிந்ததாக அவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தனது கணவரை கடத்திக் காணாமல் ஆக்கியவர்களுக்கு காளியம்மன் தண்டனை வழங்கவேண்டும் எனக் கோரியே அவர் இந்த நேர்த்திக் கடனை செலுத்தியுள்ளார்.

கடந்த 13 வருடங்களாக தனது கணவனைத் தேடி அலைந்த சந்தியா, தனது கணவனின் சுவாசக் காற்று நின்றதாக கருதப்படும் அக்கறைப்பற்று மண்ணில் 13 தீபங்களை ஏற்றி இந்த தேங்காய் சிதறுவது போன்று எனது கணவனைக் கடத்தியவர்களும் சிதற வேண்டும் என்றும் வேண்டுதல் செய்தார்.

தான் ஒரு பெண் என்ற ரீதியில் தனது கணவனுக்காக இன்றுவரை போராடி ஆலயத்தில் சாபம் இட்டுச்சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)



# மாளிகைக்காடு றியல் பவர் விளையாட்டுக்கழக இப்தார்

அக்கரைப்பற்று, ஏப். 20

மாளிகைக்காடு பிரதேசத்தில் பலம்வாய்ந்த விளையாட்டுக் கழகமான றியல் பவர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு அதன் தலைவர் தாணிஸ் ரஹ்மத்துல்லா தலைமையில் அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் மேல்மாடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கலாசார உத்தியோகத்தர் கன்னியத்துக்குறிய அஷ்ஷேக் ஏ. தெளபீக்கின் (நளீமி) மார்க்கச் சொற்பொழிவும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் பைசர் ஹாஜியார், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மாஹிர், றியல் பவர் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகத் தலைவர் நாஸர், ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் இம்தியாஸ், கழகத்தின் செயலாளர் சஜாத் மற்றும் உறுப்பினர்கள், அஹூவர் ஆசிரியர், பைசர் ஆசிரியர், அமைப்புக்களின் பிரதிநிதிகள், அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பரிபாலன சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பற்றிமா புதிய அதிபராக அருட் சகோ. ரெஜினோல்ட்



அக்கரைப்பற்று, ஏப். 20

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையின் புதிய அதிபராக அருட் சகோ ரெஜினோல்ட் நேற்று புதன்கிழமை காலை கடமையேற்றார்.

இதுவரை கடமையாற்றிய அருட் சகோதரர் செபமாலை சந்தியாகு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபராக இடமாற்றம் பெற்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பதவி ஏற்கிறார்.

கடமை ஏற்கும் வைபவத்தை பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர் சங்கம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது வீதியின் இருமருங்கிலும் சாரணிய மாணவர்கள், சென் ஜொன்ஸ் அம்புலன்ஸ் சங்க மாணவர்கள், சிரேஷ்ட மாணவத் தலைவர்கள் ஆகியோரால் புதிய அதிபர் வரவேற்கப்பட்டார்.

கல்லூரியில் அதிபர் அலுவலகத்தில் கடமையேற்பு வைபவம் சர்வமதத் தலைவர்களின் ஆசியோடு இடம் பெற்றது.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹதுல் நஜீம் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து முன்னிலையில் புதிய அதிபர் அருட் சகோ. ரெஜினோல்ட், முன்னாள் அதிபர் அருட் சகோ. சந்தியாகு செபமாலையிடமிருந்து கடமையை பொறுப்பேற்றார். (அ)

# கல்முனை கார்மல் பற்றிமா அதிபருக்குப் பிரியாவிடை



அக்கரைப்பற்று, ஏப். 20

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை அதிபராக சிறப்பாக கடமையாற்றிய அருட் சகோதரர் செபமாலை சந்தியாகுவுக்கு மகத்தான பிரியாவிடை வைபவம் இடம்பெற்றது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபருக்கான பிரியாவிடை வைபவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர் சங்கம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏற்பாட்டில் காலை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் அதிபர் அருட்சகோதரர் செபமாலை சந்தியாகுவின் பிரியாவிடை நிகழ்வு ஆரம்பமானது .

கல்லூரியில் தேசிய கொடி மற்றும் பாடசாலை கொடி ஏற்றப்பட்டு கீதங்கள் இசைக்கப்பட்டன. தொடர்ந்து மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் வரவேற்புரை, அதிதிகளின் உரைகள், பாடல், நடனம், என வாழ்த்துரைகள் நன்றிஉரைகள் இடம் பெற்றன.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்ட அதிபர் அருட்சகோதரர் செபமாலை சந்தியாகு இதற்கு முன்னர் பல பாடசாலைகளில் அதிபராக பணியாற்றியிருந்தார். இவருடைய காலப்பகுதியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை கல்வி விளையாட்டு இணைப்பாடவித செயற்பாடுகள் என மாவட்ட ரீதியாக பிரகாசித்ததுடன் கடந்த புலமைபரிசில் பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர்.

அத்துடன் புலம் பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர்களை அந்த அந்த நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை நிறுவுவதற்கான வழிகாட்டல்களை வழங்கியதுடன் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை அபிவிருத்திக்கு பல்வேறு நிகழ்சிகளை நடத்தி அதன் ஊடாக பாடசலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தார்

நாளை வெள்ளிக்கிழமை அதிபர் அருட் சகோதரர் செபமாலை சந்தியாகு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபராக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். (அ)

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு திவிநெகும சந்தை ஓட்டமாவடியில்

மட்டக்களப்பு, ஏப். 20

ஓட்டமாவடி பிரதேச செயலகமும் சமுர்த்தி திணைக்களமும் நோன்பு பெருநாளை முன்னிட்டு நடத்திய ‘சமுர்த்தி அபிமானி’ விற்பனை கண்காட்சி பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவேனேந்திரன், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன் அதிதிகளாக ஓட்டமாவடி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், சமுர்த்தித் திணைக்களத்தின் மாவட்ட செயலக கணக்காளர் எம்.எஸ். பஸீர், பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் பி.எம். சிஹான், கருத்திட்ட முகாமையாளர் என்.விஜிதன் கலந்து கொண்டனர்.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான கொடுப்பனவு ஆரம்ப கட்டமாக 45 ஆயிரம் ரூபா வீதம் 186 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன் ‘சமுர்த்தி அபிமானி’ விற்பனைக் கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (அ)

# உக்ரைனுக்கு புடின் திடீரென பயணம்!

## படைத் தளபதிகளுடன் சந்திப்பு





மொஸ்கோ, ஏப். 20

**ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் கெர்சன் மற்றும் லுகான்ஸ்க் மாகாணங்களுக்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் திடீர் பயணம் மேற்கொண்டார்.**

இதன்போது புடினின் உதவியாளர்களில் ஒருவர் அணு ஆயுத சூட்கேஸை சுமந்துவரும் வரும் காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.


இந்நிலையில் அங்கு அமைக்கப்பட்டுள்ள ரஷ்ய இராணுவ தலைமையகத்திற்கு சென்ற புடின், கள நிலவரம் குறித்து படைத் தளபதிகளிடம் கேட்டறிந்ததாக கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் அணு ஆயுத கால்பந்து என்னும் அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் சூட்கேஸைப் போன்று, இந்த சூட்கேஸ் ரஷ்யாவின் அணு ஆயுதங்களை கட்டுப்படுத்தும் விடயமாகும்.

இந்நிலையில் புடின், ரஷ்யாவின் அணு ஆயுதங்கள் தாங்கி செல்லும் திறன்கொண்ட ரி.யு-95 எம்.எஸ் ரக போர் விமானங்களுடன் திடீர் போர் ஒத்திகையும் நடத்தியுள்ளார்.

இதேவேளை புடினின் வருகைகள் பற்றிய செய்திகளுக்கு பதிலளித்த உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் அலுவலகத்தின் ஆலோசகர் மைக்கைலோ பொடோலியாக், ரஷ்ய தலைவர் உக்ரைனின் "ஆக்கிரமிக்கப்பட்ட மற்றும் பாழடைந்த பிரதேசங்களுக்கு கடைசி முறையாக தனது கூட்டாளிகளின் குற்றங்களை அனுபவிக்க" சுற்றுப்பயணம் செய்கிறார் என்று ருவீட் செய்துள்ளார்.

(அ)



# வாகனத் தரிப்பிடம் இடிந்து நியூயோர்க்கில் ஒருவர் பலி!

நியூயோர்க், ஏப். 20

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வாகனத் தரிப்பிட கட்டடமொன்று இடிந்ததால் ஒருவர் உயிரிழந்ததுள்ளார்.

மன்ஹற்றன் பிரதேசத்திலுள்ள பல மாடி கட்டடமொன்று நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இடிந்துள்ளது என அசர சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேலும் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கட்டடத்தில் மேலும் இடிபாடுகள் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் மீட்புக் குழுவினரை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளதாக உள்ளூர் தீயணைப்புத் திணைக்களத்தின் தலைவர் தெரிவித்தார்.

எனினும், மோப்ப நாய்கள் மற்றும் ட்ரோன்கள் சகிதம் கட்டடத்துக்குள் தேடுதல்கள் நடத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

"கட்டடம் சிதைவடையும் போது அதற்குள் 6 பேர் இருந்தனர் என நம்பப்படுகிறது. ஒருவர் உயிரிழந்துவிட்டார். நான்கு பேர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களின் உடல்நிலை ஸ்திரமாக உள்ளது. மற்றொருவர் சிகிச்சை பெற மறுத்துள்ளார்" எனவும் அவர் தெரிவித்தார்.

(அ)


# மனைவி தொடர்பில் எழுந்த சர்ச்சை; பிரதமர் ரிஷி சுனக்குக்கு தலைகுனிவு

லண்டன், ஏப். 20

அரசு பணத்தில் நன்மை பெறும் அமைப்பு ஒன்றுடன் தனது மனைவிக்கு தொடர்பு இருப்பதை பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் மறைத்ததாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து பிரதமர் ரிஷி விசாரணைக்குட்படுத்தப்பட இருக்கிறார்.

சமீபத்தில், பிரித்தானிய அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதில், குழந்தைகள் நலன் அமைப்புகளுக்கான உதவித்தொகை, சில நிபந்தனைகளுக்கு உட்படும் நிலையில் இரட்டிப்பாக்கப்படுவதாக அறிவித்திருந்தார் சேன்ஸலர் ஜெரமி ஹண்ட்.

பிரதமர் ரிஷியின் மனைவியான அக்ஷதா மூர்த்தி, குழந்தைகள் நல அமைப்பான கொரு கிட்ஸ் என்னும் அமைப்பில்



பங்குதாரராக உள்ளார்.ஆகவே, பிரதமர் அறிவித்த சலுகை ஒன்றின் மூலம், அவரது குடும்பத்துக்கே கூடுதல் இலாபம் கிடைக்கிறதா என்பதைக் குறித்து ரிஷி பதிலளிக்கவேண்டுமென லிபரல் டெமாக்ரட்ஸ் கட்சியின் துணை தலைவரான வெண்டி சம்பர்லெய்ன் கோரியிருந்தார்.

இது குறித்து பிரதமரின் ஆலோசகரான லூரி மக்னஸ் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என வெண்டி வலியுறுத்தியிருந்தார். அத்துடன், தொழில் கட்சியினரும் இது குறித்துக் கேள்வி எழுப்பினார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்கள் சொத்துக்கள் குறித்த விடயங்களை வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும், எதையும் மறைக்கக்கூடாது என விதி உள்ளது.அப்படி இருக்கும்போது, பிரதமர் ரிஷியின் மனைவியான அக்ஷதா மூர்த்தி, குழந்தைகள் நல அமைப்பான கொரு கிட்ஸ் என்னும் அமைப்பில் பங்குதாரராக உள்ளது தொடர்பான விடயங்களை ரிஷி மறைத்தாரா என்பது குறித்து கேள்வி எழுந்துள்ளதால், அது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தர நிலைகளுக்கான ஆணையரான டானியல் கிறீன்பேர்க், இந்த விசாரணையை மேற்கொள்ள இருக்கிறார்.பிரதமர் ரிஷி, பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்கள் குறித்த விடயங்கள் எதையும் மறைக்கக்கூடாது என்னும் விதி உட்பட விதிகள் எவற்றையாவது மீறினாரா என்பது குறித்து டானியல் கிறீன்பேர்க் விசாரணை மேற்கொள்ள இருக்கிறார்.

தான் பிரதமரானதும், சீட் பெல்ட் அணியாவிட்டால் அபராதம் விதிக்கப்படும், முந்தைய பிரதமர் போரிஸ் ஜோன்சன் நடத்திய விருந்தில் விதிகளை மீறி பங்கேற்றவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும், ஆக, அரசை மீண்டும் ஒழுக்க நெறிமுறைகளுக்குட்பட்டதாக மாற்றுவேன் என ரிஷி கூளுரைத்திருந்த நிலையில், அவரே தன் மனைவிக்கு அரசு பணத்தில் நன்மை கிடைப்பது தொடர்பிலான ஒரு விடயத்தை மறைத்ததாக விசாரணைக்குட்படுத்தப்பட இருப்பதால், பெரும் தலைக்குனிவை சந்திக்கும் நிலைமைக்கு ஆளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# உலகத்தை பனிப்போரை நோக்கி தள்ளுகிறது சீனா

## அமெ. அரசியல் நிபுணர்கள் குற்றச்சாட்டு

நியூயோர்க், ஏப். 20

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உலகத்தை பனிப்போரை நோக்கி தள்ளுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அரசியல் நிபுணர்கள் இவ்வாறு குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த மார்ச் 20ஆம் திகதி சென்ற சீன ஜனாதிபதி மூன்று நாட்கள் தங்கி ஜனாதிபதி புடினுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

போர்க்குற்றங்களுக்காக சர்வதேச குற்றவாளியான புதினை கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்திருந்த நிலையில் ரஷ்யாவுக்கு ஆதரவைத் தெரிவிக்கவே சீன ஜனாதிபதி மொஸ்கோ சென்றதாகக் கூறப்படுகிறது.

தொடர்ந்து ராணுவ ஒத்துழைப்பு, ஆயுத பேரம் உள்ளிட்ட பேச்சுவார்த்தையில் ரஷ்யாவும் சீனாவும் ஈடுபட்டு வருகின்றன.

அமெரிக்க வான்வெளிக்கு உளவு பலூனை அனுப்பியதை சுட்டிக்காட்டி, அமெரிக்காவுடன் சீனா பனிப்போரில் ஈடுபட்டு வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

(அ)

# சீன வைத்தியசாலையில் தீ விபத்து 21 பேர் உயிரிழப்பு! 70 பேர் காயம்!!

பீஜிங், ஏப். 20



சீனாவில் வைத்தியசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் பீஜிங்கில் உள்ள மருத்துவமனை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது மேலும் 70 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு ஊடக அறிக்கைகளின்படி, சீனாவில் உள்ள மருத்துவமனைகளில் தீ விபத்துகள் பற்றிய செய்திகள் மிகவும் அரிதானவை.

இந்த தீ விபத்து குறித்து சீன அதிகாரிகள் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)




### உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

# இறுதிப் போட்டிக்கான ஆஸி. அணி அறிவிப்பு!

சிட்னி, ஏப். 20

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு பட் கம்மின்ஸ் தலைமை தாங்குகிறார்.

வரும் ஜூன் 7ஆம் திகதி இங்கிலாந்தின் ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்திய அணியை எதிர்கொள்கின்றது.

இந்தப் போட்டி முடிந்த கையோடு அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்கு எதிராக ஆஷஷ் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடருக்கான முதல் இரண்டு போட்டிகளிலும் இதே அணி விளையாடும் என கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அணி விவரம்: பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), ஸ்கொட் போலண்ட், அலெக்ஸ் ஹாரி, கமரூன் கிறீன், மார்கஸ் ஹாரிஸ், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்க்லிஸ், உஸ்மான் கவாஜா, மோர்னஸ் லபுஷேன், நதன் லயன், மிற்செல் மார்ஷ், டொட் முர்பி, மத்தியூ ரென்ஷா, ஸ்டீவ் ஸ்மித் , மிற்செல் ஸ்டார்க், டேவிட் வோர்னர்.




# டோனி அடுத்து ஆண்டும் தொடர்ந்து விளையாடுவார்

### மொயின் அலி

சென்னை, ஏப். 20

டோனி அடுத்த இரண்டு, மூன்று வருடங்கள் கூட விளையாடலாம் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் மொயின் அலி தெரிவித்திருக்கிறார்.

டோனி விரைவில் ஓய்வு பெறுவார் என்று கடந்த சில தொடர்களாக பலரும் தெரிவித்து வருகின்றனர். ஆனால், அதனை எல்லாம் பொய்யாக்கி சென்னை அணியை வழிநடத்தி வருவதுடன், சிறப்பான தலைமையை டோனி வழங்கி வருகிறார்.

இந்த நிலையில், டோனி அடுத்த ஆண்டு ஓய்வு பெறுவாரா? என்று சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் மொயில் அலியிடம் கேட்கப்பட்டது.

இதற்கு அவர், “டோனி ராஜஸ்தானுக்கு எதிராக சிறப்பாக ஆடியது எனக்கு ஆச்சரியத்தை அளிக்க வில்லை. நான் பயிற்சியின்போது டோனி விளையாடுவதை பார்த்து வருகிறேன். அவர் நம்பமுடியாத அளவில் சிறப்பாக விளையாடி வருகிறார். இந்த வயதில் இவர் இவ்வாறு ஆடுவது அற்புதமானது.

பின் வரிசையில் களமிறங்கி ஆடுவது எளிதல்ல. மக்கள் அதனை அடிக்கடி மறந்துவிடுகிறார்கள். ஆனால், அதுதான் அவரை சிறப்பாக்கி இருக்கிறது. நிச்சயமாக டோனி அடுத்த வருடமும் விளையாடுவார். அவர் ஆடுவதை பார்க்கும்போது அவர் தனது ஆட்டத்தை நிறுத்துவார் என்று நான் கருதவில்லை. அடுத்த இரண்டு, மூன்று வருடங்கள்கூட அவர் விளையாடலாம் - என்றார். (ஐ)

# ஹைதராபாத்தை 14 ஓட்டங்களால் வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்

ஹைதராபாத், ஏப். 20

சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

194 ஓட்டங்கள் இலக்கை துரத்திய சன் ரைசர்ஸ் அணிக்கு கடந்த போட்டியில் சதம் விளாசிய ஹாரி ப்ரூக் இம்முறை 2ஆவது ஓவரிலேயே விக்கெட்டை பறிகொடுத்தார். அவரை வீழ்த்திய ஜசன் பெஹ் ரன்டோர்ப் 4ஆவது ஓவரில் 7 ஓட்டங்கள் எடுத்திருந்த திரிபாதியின் விக்கெட்டையும் எடுத்தார். எனினும் மயங்க் அகர்வால் இம்முறை நிதானமாக விளையாடினார்.

அவருக்கு பக்கபலமாக சிறிது நேரம் தாக்குப்பிடித்தார் அணித் தலைவர் அய்டன் மார்க்ரம். 22 ஓட்டங்கள் எடுத்திருந்த மார்க்ரமை மும்பை வீரர் கிறீன் வெளியேற்ற, அபிஷேக் சர்மா வந்தே வேகத்தில் நடையைக் கட்டினார். ஆனால், ஹென்றிச் கிளாசென் வந்ததும் அதிரடியாக விளையாடினார்.

16 பந்துகளில் 36 ஓட்டங்கள் சேர்த்திருந்த அவரை சாவ்லா வீழ்த்த, ஆரம்பம் முதல் நிலைத்திருந்த மயங்க் அகர்வாலை 48 ஓட்டங்களில் இம்பேக்ட் வீரராக வந்த ரிலே மெரிடித் ஆட்டமிழக்க செய்தார். இதன்பின் வந்த நடுவரிசை வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை.

கடைசி 6 பந்துகளுக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட, அர்ஜுன் டெண்டுல்கர் பந்துவீசினார். ஓவரின் ஐந்தாவது பந்தில் புவனேஷ்வர் குமாரை ஆட்டமிழக்க செய்தார். ஐ. பி. எல். தொடரில் அர்ஜுன் எடுக்கும் முதல் விக்கெட் இதுவாகும். கடைசி ஓவரில் 5 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்த மும்பை இந்தியன்ஸ் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.




சன்ரைசர்ஸ் அணி 178 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

மும்பை இந்தியன்ஸ் தரப்பில் சாவ்லா, பெஹ் ரன்டோர்ப், மெரிடித் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

இதேநேரம் மும்பை வீரர் ரிம் டேவிட் இந்தப் போட்டியில் 4 பிடியெடுப்புகள் மற்றும் ஒரு ரன் அவுட் செய்து வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. மும்பை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக இஷான் கிஷன், ரோஹித் ஷர்மா களமிறங்கினர். அதில் வழக்கம்போல ரோஹித் ஷர்மா முதலில் ஆட்டமிழந்தார். நடராஜன் வீசிய பந்தில் பிடிகொடுத்து 28 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இஷான் கிஷன் 2 சிக்ஸர்களை விளாசி நம்பிக்கை கொடுத்தாலும் அந்த நம்பிக்கை 38 ஓட்டங்களை வரையே நீடித்தது. அடுத்து சூர்யகுமார் யாதவ் வந்த வேகத்தில் சிக்ஸ் அடித்தார். என்ன அவசரமோ ஆட்டமிழந்தார். 15 ஓவர் முடிவில் 3 விக்கெட்களை இழந்த மும்பை 130 ஓட்டங்களை சேர்த்தது.

திலக் வர்மா 4 சிக்ஸர்களை அடித்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 17 பந்துகளில் 37 ஓட்டங்களைச் சேர்த்தவரின் விக்கெட்டை பறித்தார் புவனேஷ்குமார். மறுபுறம் கமரூன் கிறீன் 40 பந்துகளில் 64 ஓட்டங்களை குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் நிலைத்து நின்றார். இறுதியில் ரிம் டேவிட் 16 ஓட்டங்களுடன் ரன்அவுட்டாக, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் மும்பை அணி 5 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஹைதராபாத் தரப்பில் மார்கோ ஜேன்சன் 2 விக்கெட்களையும் நடராஜன், புவனேஷ்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# சம்பியன்ஸ் லீக் உதைபந்து ரியல் மட்ரிட் அரையிறுதியில்!

மட்ரிட், ஏப். 20

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட போட்டியில் நேற்று நடைபெற்ற காலிறுதி 2ஆவது சுற்று போட்டியில் செல்சீ - ரியல் மட்ரிட் அணிகள் மோதின. இரு அணிகளும் சமபலம் வாய்ந்த அணிகள் என்பதால் இந்தப் போட்டிக்கு ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

ஆட்டம் தொடங்கியது முதலே இரு அணி வீரர்களும் கோல் அடிக்க தீவிரம் காட்டினர். இரு அணி வீரர்களும் முதல்பாதியில் போராடியும் கோல் அடிக்க முடிய வில்லை. இதனால் ஆட்டத்தின் முதல் பாதி 0-0 என்ற கணக்கில் இருந்தது .

தொடர்ந்து 2ஆவது பாதியில் ரியல் மட்ரிட் அணியின் ரொட்ரிகோ தனது 58ஆவது கோலை அடித்தார். இதனால் அந்த அணி 1-0 என முன்னிலை பெற்றது. தொடர்ந்து 80ஆவது நிமிடத்தில் ரொட்ரிகோ கோல் அடிக்க ரியல் மட்ரிட் அணி 2-0 என முன்னிலை பெற்றது.

பதில் கோல் அடிக்க செல்சீ அணி வீரர்கள் போராடியும் பலன் அளிக்கவில்லை. இதனால் முடிவில் 2-0 என ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது. ரியல் மட்ரிட் - செல்சீ மோதிய காலிறுதியின் முதலாவது சுற்று போட்டியில் ரியல் மட்ரிட் அணி 2-0 என்ற கணக்கில் வென்று இருந்தது. இதனால் ஒட்டு மொத்தத்தில் ரியல் மட்ரிட் அணி 4-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (ஐ)



# தேசிய அரசு அமைப்பதற்கு முன் பொது வேலைத்திட்டம் அவசியம்

## உதய கம்மன்பில வலியுறுத்து

கொழும்பு, ஏப். 20

**“அமைச்சுகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் தேசிய அரசு நிறுவப்படுமானால் அது நாட்டுக்கு பேரழிவாகவே அமையும்.”-என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், உத்தர லங்கா சபாகய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**



தேசிய அரசமைப்பதற்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் விடுக்கவுள்ளார்.

இந்த அழைப்பை எதிர்வரும் 24 ஆம் திகதி ஜனாதிபதி விடுப்பாரென தெரியவருகின்றது.

இந்நிலையில் தேசிய அரசில் ‘உத்தர லங்கா சபாகய (விமல், வாசு, கம்மன்பில கூட்டணி) இணையுமா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தேசிய அரசு தொடர்பான யோசனையை 2022 ஏப்ரல் 8 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எமது அணிதான் முன்வைத்தது. எனினும், அந்த யோசனையை அவர் ஏற்கவில்லை.

தேசிய அரசு அமைக்கப்படவேண்டுமானால் அதற்கு முன்னர் பொதுவானதொரு வேலைத்திட்டம் அவசியம். அந்த வேலைத்திட்டத்தை அடிப்படையாக வைத்தே ஆதரிப்பதா அல்லது இல்லையா என்ற முடிவுக்கு எதிரணிகளால் வரக்கூடியதாக இருக்கும்.

மாறாக அமைச்சு பதவிகளை அதிகரித்தும் கொள்ளும் நோக்கில் தேசிய அரசு அமைக்கப்படுமானால் அது நாட்டுக்கு மற்றுமொரு அழிவாகவே அமையும். பொது வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் ஆராய்ந்து எமது முடிவு அறிவிக்கப்படும்-என்றார். (அ)

# மலையகத்தில் கடும் வறட்சி

கொழும்பு, ஏப். 20

மலையகத்தில் கடந்த சில மாதங்களாக வறட்சியான கால நிலை நிலவி வருகிறது.

இந்த வறட்சியான காலநிலையினை தொடர்ந்து காசல் நீர்த்தேக்கத்தில் என்றுமில்லாத அளவுக்கு நீர் தாழியிறங்கியுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக காணப்பட்ட வறட்சியான காலநிலையை அடுத்து வெப்பம் அதிகமாக காணப்படுவதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு தேவையான புல்லை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கால்நடைகளுக்கு போதியளவு உணவு வழங்க முடியாததன் காரணமாக பால் உற்பத்தி குறைந்துள்ளதாகவும் இதனால் தங்களது வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவி வரும் வறட்சியினால் பல பிரதேசங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு காணப்படுவதுடன் நீரின்றி பலர் பல் வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கொரோனா சோதனை முன்னெடுக்கவேண்டாம்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப். 20

கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை முன்னெடுக்கவேண்டாம் என்று கொழும்பு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் யாழ். போதனா வைத்தியசாலைக்கும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து போதனா வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு கொரோனா சோதனை முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்தும் இந்தச் சோதனைகளை முன்னெடுப்பதற்கான அனுமதி போதனா வைத்தியசாலையால் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான சோதனையை முன்னெடுக்கவேண்டாம் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரால் நேற்று முன் தினம் சூம் செயலி ஊடாக முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலிலும் இந்தத் தகவல் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வருபவர்களில் கொரோனாத் தொற்றுக்குரிய அறிகுறிகளைக் கொண்டிருந்தால், அவர்களுக்கு வேறு நோய்கள் இனங்காணப்படாவிட்டால் மாத்திரமே கொரோனா பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அமைச்சு வாய்மொழி மூலமாக அறிவுறுத்தியுள்ளது. (அ)

# வாகன திருத்தகம் ஒன்றின் மீது யாழ்ப்பாணத்தில் குண்டு வீச்சு!



யாழ்ப்பாணம், ஏப். 20

வாகன திருத்தகம் ஒன்றின் மீது வெடிகுண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் , யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் உள்ள வாகனத் திருத்தகம் ஒன்றின் மீது இனம்தெரியாத நபர்கள் குண்டு ஒன்றை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீசியுள்ளனர்.

குறித்த குண்டு வாகனத் திருத்தகத்தில் நின்ற கார் ஒன்றின் மீது விழுந்து வெடித்துள்ளது. அதனால் காருக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த குண்டு உள்ளூர் தயாரிப்பாக இருக்கலாம் என்றும், அது பெரியளவிலான சேதங்களை விளைவிக்கக்கூடியவாறு காணப்படவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)

# இறக்குமதி பொருட்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்!

## இராஜாங்க அமைச்சர் சியாம்பலாப்பிட்டிய

கொழும்பு, ஏப். 20

மேலும் பல பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் எதிர்காலத்தில் தளர்த்தப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

சுங்கத்தின் எதிர்பார்க்கப்படும் வருமான இலக்கை அடைவதற்கும் இது உதவும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுங்கத்துறையின் வருமான இலக்குகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



“முதல் 3 மாதங்களுக்கு சுங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள வருமான இலக்கு 27 ஆயிரம் கோடி ரூபாயாகும். ஆனால், அந்த காலகட்டத்தில் கிடைத்த வருமானம் எதிர்பார்த்த வருமானத்தை விட 12 சதவீதம் குறைவாகவே காட்டப்பட்டுள்ளது. 2021இல், 485 பொருட்களும், 2022இல் 750 பொருட்களும் இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டன.

இதன்படி, இது தொடர்பான கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும். மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய முடிவுகள் எடுக்கப்படும்” என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பால்மா விலையை மேலும் குறைக்க இறக்குமதி நிறுவனங்கள் இணக்கம்

கொழும்பு, ஏப். 20

எதிர்வரும் நாட்களில் பால் மாவின் விலைகளை மேலும் குறைப்பதற்கு நாட்டிலுள்ள பிரதான பால் மா இறக்குமதி நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், இந்த இணக்கத்தை வெளிப்படுத்தப்பட்டதாக பேஸ்புக் பதிவொன்றில் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான அறிக்கை விரைவில் வர்த்தக அமைச்சகத்துக்கு அனுப்பப்பட உள்ளதாக வர்த்தக அமைச்சர் அந்தப் பதிவில் மேலும் கூறியுள்ளார். (அ)

# பனாமா கப்பலில் நாட்டை விட்டு தப்ப முயன்ற 4 பேருக்கு பிணை!

கொழும்பு, ஏப். 20

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள பனாமா நாட்டு கப்பலுக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வரையும் பிணையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலி பிரதான நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, ஒவ்வொருவரையும் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் 24ஆம் திகதி பனாமா நாட்டுக்கு சொந்தமான சரக்குக் கப்பலுக்குள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் நோக்கில் நான்கு யாழ். இளைஞர்கள் இரகசியமாக பிரவேசித்துள்ளனர்.

கப்பல் மார்ச் 26 இல் அமெரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்தபோது சுயஸ் கால்வாய் அருகே ஊழியர்கள், இவர்களை அடையாளம் கண்டதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர்.

பின்னர், கப்பலின் அறிவிப்பின் பேரில், கடந்த 10ஆம் திகதி இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். (அ)

## கிளிநொச்சியில்...

னின் அழைப்பின்பேரில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று காலை 9 மணி தொடக்கம் கிளிநொச்சி சேவைச் சந்தை முன்பாக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்றது.

அன்னை பூபதியை நினைவேந்தி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய பின்னர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. மாலை 4 மணியளவில் இந்தப் போராட்டம் நிறைவுக்கு வந்தது. இதில், பாராளுமன்ற உறுப்பினருடன் தமிழரசு கட்சி ஆதரவாளர்கள், மதத் தலைவர்கள், பொது மக்கள் பங்கேற்றனர்.

இதன்போது, தேசிய இனப்பிரச்னைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த வலியுறுத்தல், சமகாலத்தில் இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்களால், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்தல்.

அட்டை பண்ணைகள், இறால் பண்ணைகள் அமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் கடல்வள அபகரிப்பை கைவிடக் கோரல், சீன நாட்டின் முதலீட்டாளர்களுக்கு கிளிநொச்சியின் காணிகளை தாரை வார்ப்பதை தடுத்து நிறுத்தல் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எதிர்க்கட்சிகளின்...

வழிபட்ட பின்னர் போராட்டக்காரர்கள் யாத்திரையை ஆரம்பித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியின் உமாசந்திர பிரகாஷ் தலைமையில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

நல்லூர், யாழ்ப்பாணம் நகரம் எனப் பல இடங்களில் கையெழுத்து சேகரிப்பு நடைபெற்றன. தொடர்ந்து பயணிக்கும் யாத்திரை குழு கிளிநொச்சி, வவுனியாவிலும் கையெழுத்துகளை சேகரித்து நாளை வெள்ளிக்கிழமை கொழும்பை சென்றடையும். அங்கு, மன்னார், காத்தான்குடி, கண்டி, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் இருந்து வரும் யாத்திரை குழுக்களுடன் சேர்ந்து கொள்ளும்.

யாத்திரையின் நிறைவில் மறைக்கப்பட்ட பல உண்மைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போதையில்...

றுத்தி வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வீட்டுக்கு வந்த மகன் வழமை போன்று தந்தையையும் தாயையும் தாக்கியுள்ளார்.

நள்ளிரவு கடந்தும் பெற்றோரை மகன் தாக்கியுள்ளார். இந்தத் தாக்குதலில் இருவரும் படுகாயமடைந்தனர். இந்நிலையில் நடுஇரவு ஒரு மணியளவில் அயலவர்கள் அவர்களை மீட்டு மருத்து வமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே தந்தையார் உயிரி ழந்தார். தாயார் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் உடல்கூற்று பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கல்வித்...

புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ள ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்கு ஆசிரியர்கள் சமுகமளிக்கவில்லை என்ற பதிலை நான் எதிர்பார்க்கவில்லை. இதனை என்னால் பாராளுமன்றத்தில் தெரிவிக்க முடியாது. பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் கூறுவதற்கான பதிலையே நான் எதிர்பார்க்கின்றேன்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளாமலிருப்பதன் பின்னணியில் அரசியல் அழுத்தம் காணப்படுவதாக கல்வி அமைச்சர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான காரணிகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்காலத்தைப் பாதிக்கும் இது போன்ற செயல்பாடுகளை தவிர்ப்பதற்காக கல்வித் துறை குறிப்பாக பரீட்சை சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக்கப்பட வேண்டும்.

கல்விப் பொதுத் தராதர பரீட்சைக் குழு இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தமது பிள்ளைகளின் பெறுபேறுகளுக்காக காத்துக் கொண்டிருக்கும் பெற்றோருக்கு பொறுப்பான பதிலை வழங்க வேண்டுமல்லவா? எனவே, எம்மால் இவ்விடயத்தில் பொறுப்பற்று செயல்பட முடியாது.

இதற்கு முன்னர் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் பெருமளவானோர் தற்போதும் சேவையில் உள்ளனர். மாணவர்களின் கல்வியை இடை நிறுத்த எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது. எனவே, கல்வித்துறையை அவசர நிலைமையின் கீழ் கல்வித் துறையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அடுத்த வாரம் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்படும்.

தொழில் சட்டங்கள் குறித்து அச்சமடைய வேண்டாம். பரீட்சைகளையும் பாடசாலைகளில் கல்வி செயல்பாடுகளையும் தடையின்றி நடத்துவதற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். இந்த வாரத்துக்குள் இதற்கான தீர்வை உரிய தரப்பினர் வழங்க வேண்டும். அவ்வாறில்லையெனில் அமைச்சரவை பொறுத்தமான தீர்மானத்தை எடுக்கும் - என்றார். (ஐ)

## கைதடி விபத்தில்...

உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்றிரவு 10 மணியளவில் ஏ- வீதியில் கைதடி பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையாக இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் அதிகாரி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது முன்னால் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பேருந்துடன் மோதுண்டு வீதியில் விழுந்துள்ளார்.

இந்நிலையில் பின்னால் வந்த வாகனம் அவரை மோதித் தள்ளியதில் அவர் உயிரிழந்தார். பொலிஸ் அதிகாரியின் உடலம் வீதியிலேயே கிடந்ததால் சுமார் அரைமணிநேரம் ஏ-9 வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. (ஐ)

## கொழும்பு...

கிளிநொச்சி டிப்போவுக்கு சொந்தமான பேருந்தே விபத்துக்கு உள்ளானது என்றும் சாரதியே இந்த விபத்தில் உயிரிழந்தார் எனவும் தெரிய வருகின்றது.

மேலும், காயமடைந்தவர்கள் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் அறிய வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் தம்புள்ளைக்கு அண்மையாக இந்த விபத்து இடம்பெற்றது.

பேருந்தும் டிப்பரும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

பேருந்தில் பயணித்த 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று முதல் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் வேட்பு மனுக்களை இரத்து செய்க!

### உதய கம்மன்பில வலியுறுத்து

கொழும்பு, ஏப். 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் இழுபறி நிலையில் உள்ளதால் விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசமைப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசிய அவர்,

நகர சபைகள் மற்றும் பிரதேச சபை தேர்தல் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்துவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஜனவரி 21ஆம் திகதி அறிவித்தது.

தேர்தல் தொடர்பில் நிதியமைச்சுடன் பேச்சுகளை மேற்கொள்ளாமல் ஆணைக்குழு தேர்தல் தொடர்பான அறிவிப்புகளை விடுத்ததால் நிதி விடுவிப்பை நிதியமைச்சு முடக்கியது. தேர்தல் ஆணைக்குழு வாக்கெடுப்புக்கு திகதி அறிவிப்பதும் பின்னர் நிதி நெருக்கடியால் தேர்தல் வாக்கெடுப்பு ஒத்திவைப்பதும் வழமையாகிவிட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழு, நிதியமைச்சு ஆகிய தரப்பினரது முரண்பாடான செயற்பாடுகளினால் வேட்பு மனுத் தாக்கல் செய்து விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் சட்டத்தின் 102ஆவது உறுப்புரையில், 'தேர்தல் ஒன்றுக்கு போட்டியிட தீர்மானிக்கும் அரச சேவையாளர் வேட்பு மனு தாக்கல் செய்து, தேர்தல் பணிகள் நிறைவு பெறும் வரை சேவையில் ஈடுபடக்கூடாது' என குறிப்பிடப்பட்டுள்ளது. விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

தேர்தல் இழுபறி நிலையில் உள்ள பின்னணியில் விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தை மாத்திரம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்போதைய பொருளாதார பாதிப்பு, வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் அடிப்படை சம்பளத்தை கொண்டு எவ்வாறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அரசியலமைப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்ய வேண்டும். அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாட்டால் அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார்.

## சீன தொலைக்...

உள்ளன.

இந்த வழியிலேயே சீன தொலைக்காட்சி முன்னர் ஓர் தொலைபேசி நிறுவன இணைப்பு மூலம் கட்டண சேவையில் இயங்கியது. தற்போது இலவச சேவையாக ஒளிபரப்பப்படுகிறது.

சீன தொலைக்காட்சி சேவை இலங்கைக்கு வெளியே புற நாடு ஒன்றில் இருந்து ஒளிபரப்பாகும் சமயம் - செய்மதி அலைவரிசை ஊடாக இலங்கைக்கு கடத்தப்பட்டு இங்கே ஒளிபரப்பப்படுவதாக தெரியவருகின்றது.

இதேநேரம் நாடு முழுவதும் கேபிள் இணைப்பு சேவை மூலமும் இந்த சேவை ஒளிபரப்பாகவுள்ளது.

நாட்டில் சில அலைவரிசைகளை மட்டும் இலவசமாக பார்வையிட முடியும். இதேநேரம் சீனத் தொலைக்காட்சி அலவரிசை இலவசமாக ஒளிபரப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பூநகரி...

கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் தற்போது அதிகளவான புத்த சிலைகள் வைக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் வடக்கு - கிழக்கு முழுவதும் இடம்பெறுகின்றன.

இதேநேரம் கச்சதீவிலும் புத்த விகாரை கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வலி. வடக்கில் உள்ள பல ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பலாலி மற்றும் மயிலிட்டி போன்ற இடங்களில் தேவாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் இனப்பிரச்னையை திசைதிருப்பும் வகையிலும் - குறுகிய அரசியல் நோக்கங்களுக்காவும் இவ்வாறு சில மத நிறுவனங்களை உருவாக்கி அரசியல் இலாபம் தேடப்படுகிறது என்றும் அவர் சாடினார். (ஐ)

## சவ்வால் தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு நாளை

கொழும்பு, ஏப். 20

ஹிஜ்ரி 1444 புனித சவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக் குழு மாநாடு நாளை வெள்ளிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற இருக்கின்றது.

இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

நாட்டின் எப்பிரதேசத்திலாவது சவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 011 243 2110, 011 245 1245, 077 731 6415 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (ஐ)

## 100,000...

சீன தேசிய வனவியல் மற்றும் புல்வெளி நிர்வா கத்திடம் இவ்விடயம் தொடர்பில் நாம் வின வினோம். ஆனால், அவர்கள் இது குறித்து அறிந்திருக்கவில்லை.

அழிந்து வரும் உயிரி னங்கள், தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான மாநாட் டின் ஒரு பங்காளியாக தமது நாடு வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை பல திருத்தங்களுடன் நிறைவேற் றியுள்ளதாக சீன தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வனவிலங்குகளின் பாதுகாப்புக்கு சீன அரசாங்கம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னுரிமை வழங்குவதாகவும் அதற்கான சர்வதேச கடமைகளை தீவிரமாக நிறைவேற்றுவதாகவும் தூதரகம் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## அன்னை பூபதி...

பேரணி கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயம் வரை சென்று பின்னர் அங்கிருந்து நடைபவனியாக அன்னை பூபதியின் சமாதி அமைந் துள்ள நாவலடி வரை நடைபெற்றது. பின்னர், பொதுச் சுடர் ஏற்றப் பட்டு அன்னைக்கு அஞ் சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசி யல்வாதிகள், மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். இதேநேரம், இந்த அஞ் சலி நிகழ்வுக்கு சமமாக யாழ்ப்பாணத்தில் நல்லூர், பல்கலைக்கழகம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களிலும் அன்னைபூபதி நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

ஈழநாடு
Eelanadu



## வவுனியாவில் இருந்து ஐவர் நேற்று தமிழகத்தில் தஞ்சம்

வவுனியா, ஏப். 20

இலங்கையில் இருந்து படகு மூலம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நேற்று அதிகாலை தமிழகம் அரிச்சல்முனைப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இலங்கையில் இருந்து அகதிகளாகப் புறப்பட்ட ஐவரே தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

வவுனியா தேக்கம்தோட்டத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 3 சிறுவர்களே இவ்வாறு தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்றவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அரசின் அதிகாரங்களை சமநிலையில் கையாளும் ஆட்சி முறையே அவசியம்!

### வலியுறுத்துகின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஏப். 20



நாட்டில் உள்ள சகல இனங்களும் வெவ்வேறு எண்ணிக்கையில் காணப்பட்டாலும் அரச அதிகாரங்களை சமநிலையில் கையாளக்கூடிய ஆட்சிமுறையே அவசியம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாசத்துக்கான யாத்திரை என்னும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வேலைத்திட்டத்தின் பயணம் நேற்று நல்லூரில் இருந்து ஆரம்பமாகியது.

இதில் கலந்துகொண்ட பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் நாட்டில் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டுமென நீண்டதொரு போராட்டம் நடத்தப்பட்டு, சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நாட்டைவிட்டு ஓடியதுடன் பதவியையும் இராஜனாமா செய்தார். பிரதமர், நிதியமைச்சர் இராஜனாமா செய்யுமளவுக்கு அந்த மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டிருந்தன.

ஆனால் இளைஞர்கள் மற்றும் மக்கள் எதிர்பார்த்த முழுமையான மாற்றத்தைப் பெறுவதற்கு முன்னராக அந்த இயக்கம் வேறு ஆட்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் இன மத பேதம் களையப்பட்டு நாடு சுதந்திரமாக இருக்கவேண்டும் என்ற புதிய சந்ததியினரின் நல்லெண்ண நோக்கத்துக்கு நாங்களும் வலுச் சேர்க்கின்றோம்.

இந்த நாட்டில் பிரதானமாக இனப்பிரச்னையுடன் ஊழல் பிரச்னை காணப்படுகின்றது.

இவை களைந்தெறியப்படவேண்டும். சகல இனத்தவர்களும் அரச அதிகாரங்களைச் சமமாகக் கையாளக் கூடியவாறான மாற்றங்ளை ஏற்படுத்தவேண்டும் என்பது இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலத்திலிருந்து கோட்பாடாக உள்ளது-என்றார். (அ)

# நான் ஆரம்பித்ததை ரணில் தொடர்கிறார்

## கூறுகின்றார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஏப். 20



**வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 ஆயிரம் இளைஞர்களுக்கு அரசாங்கம் மறுவாழ்வளித்தது. அவர்களை பராமரித்து, நிதி உதவியை வழங்கியது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

நானே சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்தேன். ஜனாதிபதி இன்று அதனை தொடர்ந்து முன்னெடுக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடனான அணுகுமுறைகள் வெற்றிகரமாக அமைந்துள்ளன. நாடு மிகமோசமான நெருக்கடியை எதிர்கொண்ட காலத்தில் நான் நிதியமைச்சராகப் பணியாற்றினேன்.

நானே சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தேன். ஜனாதிபதி இன்று அதனை தொடர்ந்து முன்னெடுக்கின்றார். சர்வதேச நாணய நிதியத்துடனான எங்களின் ஈடுபாடு மிகப் பெரிய வெற்றியாக அமையும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

மிக நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு எங்களுக்கு சர்வதேச உதவிகள் தேவை. நாங்கள் இந்தியாவுடன் மேலும் ஒன்றிணைவை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம். இதனடிப்படையில் நாங்கள் இந்தியாவுடனான விமான சேவைகளை அதிகரிக்க முயல்கின்றோம். நாங்கள் விரைவில் இந்தியா இலங்கை படகுச் சேவையை ஆரம்பிப்போம்.


இலங்கை தனியொரு பிராந்திய கூட்டமைப்புடன் மாத்திரம் இணைந்து செயற்பட விரும்பவில்லை.

நாங்கள் சீனாவுடன், மேற்குலக, மத்திய கிழக்கு நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட விரும்புகின்றோம்-என்றார். (அ)

## அரசியல் நோக்கங்களுக்காக தூண்டப்படுகிறது இனவாதம்!

### உமாசந்திரா பிரகாஸ் கருத்து

யாழ்ப்பாணம், ஏப். 20



கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது இனவாதக் கருத்துக்களைக் கூறியே கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியது என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாசந்திரா பிரகாஸ் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இனங்களுக்கு இடையிலான முரண்பாடு மற்றும் சகோதரத்துவம், மத ரீதியிலான முரண்பாடு என்பன தூண்டப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாசத்துக்கான யாத்திரை எனும் தொனிப்பொருளில் நேற்று யாழ்.நகரில் கையெழுத்து வேட்டையுடன் பேரணியும் இடம்பெற்றது. இதில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச இயந்திரத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென இளைஞர்கள் கோரிக்கையை முன்வைத்து வீதிக்கு இறங்கியதன் பலனாக இன்று புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அவ்வாறானதொரு பின்னணியில் இந்தப் பேரணியும் புதிய தலைமுறையான இளைஞர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டில் அண்மைக்காலமாக இனங்களுக்கு இடையிலான முரண்பாடு மற்றும் சகோதரத்துவம், மத ரீதியிலான முரண்பாடு என்பன அதிகரித்துள்ளன - என்றார். (அ)

## கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று!

யாழ்ப்பாணம், ஏப். 20

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அண்மையில் குறிப்பிட்டார்.

எனினும், எதிர்க்கட்சிகள் இதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளன. (அ)

## தட்டுப்பாடு உள்ள 60 மருந்துகள் தனியாரிடமிருந்து கொள்வனவு


கொழும்பு, ஏப். 20

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு நிலவும் 60 வகையான மருந்துகளை தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது மருந்து பற்றாக்குறை படிப்படியாகக் குறைவடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரு மாதத்துக்கு முன்னதாக நாட்டில் 170 இற்கும் அதிகமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



## அன்னை பூபதிக்கு நேற்று யாழ்.பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 20

தியாகத் தாய் அன்னை பூபதியின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வடக்கு-கிழக்கு எங்கும் பெரும் எழுச்சியுடன் நடைபெற்றன.

அன்னை பூபதியின் 35 ஆவது நினைவு தின இறுதி நாள் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான தூபி வளாகத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழக மாணவர்

ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அன்னை பூபதியின் நினைவுருவ படத்திற்கு ஈகச் சுடரேற்றப்பட்டு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டதோடு நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

நினைவேந்தலில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள்,ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.